


# கதைத் திரட்டு

## ஆறாம் வகுப்பு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

# கதைத் திரட்டு

## ஆறாம் வகுப்பு

தீண்டாமை ஒரு பாவச் செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு
முதற் பதிப்பு—1980
மறு பதிப்பு—1983

ஆசிரியர் :
புலவர் த. முருகேசன்
தமிழாசிரியர்
ஆர். சி. டி. உயர்நிலைப்பள்ளி
சிதம்பரம்
தென்னார்க்காடு மாவட்டம்

விலை ரூ. 1-40

மேலாய்வாளர் :
புலவர் முத்து. சடையப்பன்,
எம்.ஏ., பி.டி.
தலைமையாசிரியர்
அரசினர் மேல்நிலைப்பள்ளி
சேரன்மகாதேவி
திருநெல்வேலி மாவட்டம்

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

புலவர் கோ. கணபதி
தமிழாசிரியர்
தியாகராயர் மேல்நிலைப்பள்ளி
சென்னை-600 017

அச்சிட்டோர் :
சூப்பர் பவர் பிரஸ், சென்னை-600 001.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | போலித் துறவி | ... | 1 |
| 2. | வறுமையில் செம்மை | ... | 10 |
| 3. | வில்வீரன் | ... | 15 |
| 4. | கோயில் பாறை | ... | 22 |
| 5. | நல்லானும் சின்னானும் | ... | 28 |
| 6. | அண்டங் காக்கை | ... | 36 |
| 7. | தங்கக் கிண்ணம் | ... | 40 |
| 8. | பழையது சாப்பிட்டேன் | ... | 44 |
| 9. | தலைமைச் சேவகன் | ... | 50 |
| 10. | தருமர் | ... | 55 |
| 11. | முருகனும் கண்ணனும் | ... | 64 |
| 12. | பூங்கோதை | ... | 70 |
| 13. | விருந்து போற்றிய வேளாளர் | ... | 77 |
| 14. | மனிதனும் விலங்கும் | ... | 83 |
| 15. | பாவலரும் காவலரும் | ... | 91 |

# 1. போலித் துறவி

கோசல நாடு ஒரு சிறந்த நாடு. அது பல வளங்களும் நிறைந்தது. அந் நாட்டினைச் சுரதன் என்னும் மன்னன் நன்கு ஆண்டுவந்தான். அவன் பெருவீரம் உடையவன். எனவே, பல சிற்றரசர் அவனுக்குக்கீழ் இருந்து திறை செலுத்தி வந்தனர். அவன் அவையில் மதிவாணன் என்னும் அமைச்சன் இருந்தான். அறிவு நிறைந்த அந்த அமைச்சன் மிகவும் நல்லவன். தன் அறிவினால் நன்கு ஆராய்ந்து மக்களுக்குப் பல நல்ல செயல்களைச் செய்துவந்தான்; மன்னன் தவறு செய்யாதவாறு தடுத்துவந்தான்; தீயவர்கள் மன்னனை நெருங்காதவாறு பார்த்துக்கொண்டான். அரசனிடம் நெருங்கிப் பழக விரும்பிய தீயவர் பலர் நேரம் பார்த்துக் கொண்டிருந்தனர். மன்னனும் மதிவாணனுடைய அறிவுரைகளைக் கேட்டு மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்துவந்தான். மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் மன்னனிடம் வேலை பார்க்கும் காடுகளுக்குத் தலைவன் வந்தான். அரசனிடம் ''அரசே, நம் அரசுக்குச் சொந்தமான காடுகளில் பல உயர்ந்த மரங்கள் உள்ளன. சிறந்த வனவிலங்குகளும் உள்ளன. அரசரது ஆணைப்படி அவற்றை நான் காத்து வருகிறேன். அதனால், சில நாள்களாகக் காட்டில் வாழும் சில முரடர்கள் தீயவர்களுடன் சேர்ந்துகொண்டு கலகம் செய்கின்றனர். காட்டில் உள்ள விலைஉயர்ந்த மரங்களையும் அருமையான விலங்குகளையும் திருடிச் செல்கின்றனர். என்னால் அவர்களை அடக்க முடிய

வில்லை. மன்னர் உடனே அவர்களை அடக்க ஏற்பாடு செய்யவேண்டுகிறேன்'' எனக் கூறினான்.

மன்னன் தன் அமைச்சன் மதிவாணனே அவர்களை அடக்க வல்லவன் என எண்ணினான். உடனே மதிவாணனைக் காட்டிற்கு அனுப்பினான். முரடர்களை அடக்கித் திருடப்பட்ட பொருள்களை மீட்டு வருமாறு அவனிடம் கூறினான். மதிவாணன் உடனே வீரர்களுடன் காட்டிற்குப் புறப்பட்டான்.

மதிவாணன் அரண்மனையில் இல்லை என்று அறிந்துகொண்ட தீயவர் பலர் மன்னனிடம் வந்தனர். மன்னனுக்குத் தீய வழிகளைக் கற்பித்தனர். அதனால் அவர்கள் நன்மை அடைந்தனர். அவர்களுள் திகம்பரன் என்ற கள்ளத் துறவி ஒருவன் இருந்தான். அவன் தன் பேச்சுத் திறமையினால் மன்னனை ஏமாற்றி வந்தான். தான் கூறுவன யாவும் தவறாமல் நடக்கும் என மன்னன் நம்புமாறு செய்தான். தன்னைச் சேர்ந்த ஒருவனை நொண்டிபோல் நடிக்கச் செய்தான்.

மன்னன்முன் கள்ளத் துறவி அமர்ந்திருந்தபோது அந் நொண்டி வந்தான். துறவியைப் பார்த்து ''ஐயா! தெய்வத்தன்மை உடையவரே! என் கால் முடமாகி விட்டது. இதனை நீங்கள்தான் நீக்கவேண்டும்'' எனக் கெஞ்சிக் கேட்டான். உடனே அக் கள்ளத் துறவி ''கண்ணை மூடிக்கொண்டு மந்திரம் சொல்லுவதுபோல முணுமுணுத்தான். கண்ணைத் திறந்து 'இவன் கால் குணமாகுக' எனக் கைகளை உயர்த்திக் கூறினான். முன்பே அந் நொண்டியிடம் கூறியிருந்ததுபோல, உடனே அவன் நன்றாக நடந்தான். உடனே ''நீங்கள் தெய்வமேதான், தீராத என் ஊனம் தீர்ந்துவிட்டது'' எனக் கூறித் துறவியின் காலில் வீழ்ந்து வணங்கினான். ''தெய்வமே! என் குறையைத் தீர்த்ததற்காக நான் தரும் காணிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்''

என்று கூறி ஒரு பெரிய பொன்முடிப்பினைக் கொடுத்தான்.

உடனே துறவி, "அப்பா! மக்களுக்கு ஏற்படும் துன்பங்களை நீக்குவது என் கடமை. அதற்குப் பொன் வேண்டா. நீயே வைத்துக்கொண்டு நலமாய் இரு. எனக்குப் பொருள்மீது ஆசை இல்லை'' எனக் கூறினான். இதனைக் கண்ட மன்னன் மிகவும் வியப் படைந்தான். உண்மையில் அந்தத் துறவி தெய்வத் தன்மை வாய்ந்தவன் என நம்பினான். அதனால் அந்தத் துறவியின்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டான். அவனைத் தன் அரண்மனையில் தங்கி யிருக்குமாறு வேண்டிக்கொண்டான்.

மன்னன் கூறியபடி அந்தத் துறவி அரண்மனையில் தங்கியிருந்தான். மன்னன் அவனை முழுதும் நம்பினான். மேலும் அவன் தெய்வத்தன்மை வாய்ந்த வன் என எண்ணினான். எனவே, துறவி கூறுவன எல்லாவற்றையும் செய்தான். துறவி, "இம் மன்னன் என்னை முழுதும் நம்பியிருக்கிறான். அமைச்சன் மதிவாணன் மிக்க அறிவுள்ளவன். அவன் திரும்பி வந்தால் நம்மை நம்பமாட்டான். அதற்குள் இம்மன்னனை ஒழித்து நாமே மன்னனாகிவிடவேண்டும். அதற்கு இம் மன்னனுக்கு நம்மீது மேலும் பக்தி ஏற்படு மாறு செய்யவேண்டும்'' என எண்ணினான். அரசன் நம்புமாறு மேலும் சில நிகழ்ச்சிகளைச் செய்துகாட்டி னான். அரண்மனையில் இருந்த ஒரு சிலர் இவனை நம்பவில்லை. இதனை அறிந்துகொண்ட அந்தத் துறவி மன்னனிடம் சொல்லி அவர்களை வேலையிலிருந்து நீக்கிச் சிறையில் அடைத்தான். தன்னுடைய கையாள் களை அரண்மனையில் பல வேலைகளில் அமர்த்தினான். மன்னன் துறவியின் அருகிலேயே இருந்து அவன் சொல்வதையே கேட்டுக்கொண்டிருந்தமையின் அரசியல் வேலைகளைக், கவனிக்கவில்லை. துறவி மன்னனிடம்,

"நீங்கள் கவலையற்று இருங்கள். இந்நாட்டு மக்களை நான் துன்பமின்றிக் காக்கிறேன். அதோடு மன்னராகிய உங்களைத் தேவலோகம் அனுப்பிவைக்கிறேன். நீங்கள் அரசாங்க வேலைகளைப்பற்றிக் கவலைப்படாமல் நான் சொல்லுகிறபடி பூசை செய்து வாருங்கள்," எனக் கூறினான்.

மன்னனும் அவனை நம்பினான். அந்தத் துறவி தனக்கு வேண்டியவர்களை அரசாங்க உயர் பதவிகளில் அமர்த்தினான்; மக்களின் வரியை உயர்த்தினான்; வரி தராதவர்களைக் கொடுமைப்படுத்தினான். மன்னனைக் கண்டு முறையிட வந்த மக்களைத் தடுத்துவிட்டான். மன்னனை எவரும் பார்க்க முடியவில்லை. மன்னனின் மனைவிகூடத் துறவியாரின் அனுமதியின்றி மன்னனைக் காண முடியவில்லை. மக்கள் மிகவும் துன்புற்றனர்; தங்களது அமைச்சர் மதிவாணன் இல்லையே என வருந்தினர்.

இவ்வாறு அந்தத் துறவி மன்னனைப் பொம்மையாக்கித் தானே நாட்டுப் பொறுப்பினை மேற்கொண்டான். மன்னனை ஒழிக்கச் சரியான சமயத்தினை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். மன்னன் தன்மீது ஐயம் கொள்ளாத வகையில் அவனிடம் நடந்துகொள்வான். தன் கையாள்களோடு பேசும்போது மன்னனை வெளியேறச் சொல்லிவிடுவான். ஒருவரும் அறியாவகையில் தன்னுடைய ஆள்களோடு பேசி அவர்களுக்குச் செய்ய வேண்டிய திட்டங்களைக் கூறுவான்.

மன்னன், "நீங்கள் இதுவரை என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" எனக் கேட்டால் உடனே அத் துறவி "அரசே! நான் இந்த உடலை இங்கேயே விட்டுவிட்டுத் தேவலோகம் சென்று தேவர்களுடன் பேசி வந்தேன். அவ்வாறு நான் தேவலோகம் போய்த் தெய்வ உடலோடு திரும்பி வருவேன். மீண்டும் இவ்

வுடலில் புகுந்துகொள்வேன். அத் தெய்வ உடலோடு நீங்கள் என்னைப் பார்க்கலாகாது. ஆகவேதான் நான் உங்களை வெளியே போகச் சொன்னேன்'' எனக் கூறிவிடுவான். மன்னனும் அதனை உண்மை என நம்பினான். ஆகவே, எவ்வாறேனும் தெய்வ உடலோடு இருக்கும்போது துறவியைப் பார்த்துவிடவேண்டும் என ஆசைப்பட்டான். ஆனால், துறவி அச்சுறுத்தியதால் அங்ஙனம் பார்க்க முயலாமல் இருந்தான்.

துறவியின் கொடுமைகளைத் தாங்க முடியாது மக்கள் வருந்தினர். அப்போது முதியவர் ஒருவர், ''நம்முடைய அமைச்சர் ஒருவர்தாம் நமக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடியவர். அரசர் இப்போது நம் பேச்சினைக் கேட்க மாட்டார்; அந்தத் துறவியின் பேச்சையே கேட்பார். எனவே, நம் நிலையினை அமைச்சருக்கு உடனே தெரிவிக்கவேண்டும்'' எனக் கூறினார். எனவே, துறவிக்குத் தெரியாமல் ஒருவனைக் காட்டிற்குச் சென்றிருக்கும் அமைச்சனிடம் அனுப்பினார். அவன் ஒருவரும் அறியாதவாறு காட்டினை அடைந்து அமைச்சனைப் பார்த்தான். அமைச்சனிடம் மன்னனது நிலையைப்பற்றிக் கூறினான். துறவியின் கொடுமைகளையும் மக்கள் படும் துன்பங்களையும் எடுத்துக் கூறினான். அமைச்சன் அனைத்தையும் கேட்டு மனம் வருந்தினான். மன்னனுக்கு வரவிருக்கும் ஆபத்தினை உணர்ந்தான். மன்னனுக்கும் மக்களுக்கும் வரவிருக்கும் துன்பத்தினைக் காப்பது தன் கடமை எனக் கருதினான். உடனே நாட்டிற்குத் திரும்பினான்.

அமைச்சன் எதிர்பாராமல் வந்ததைக் கண்ட துறவி அதிர்ச்சியடைந்தான். தன் எண்ணம் நிறைவேறாமல் போய்விடுமோ என அஞ்சினான். மன்னனை அமைச்சன் சந்திக்க இயலாமல் செய்தான். அமைச்சன் துறவியின் சூழ்ச்சிகளை நேரில் அறிந்தான். அவனைத் தானும் சூழ்ச்சியாலேயே வெல்ல முடிவு செய்தான். உடனே

நேராகத் துறவியிடம் வந்து வீழ்ந்து வணங்கி, "பெருமை உடையவரே, உங்களின் திறமையையும் சிறப்பினையும் பலர் சொல்லக் கேட்டேன். இப்போது நேராகவே பார்க்கிறேன். உங்களைப்போன்ற ஆற்றல் வாய்ந்தவர் இந்நாட்டில் இருப்பது எங்கள் புண்ணியம். என்னையும் நீங்கள் ஏற்றுக்கொண்டு நல்வழி காட்ட வேண்டும்'' எனக் கூறினான்.

அமைச்சன் உண்மையாகவே தன்னிடம் பக்தி கொண்டுள்ளதாகத் துறவி நினைத்தான். உடனே "அமைச்சரே! அப்படியே ஆகட்டும். இன்று முதல் நீங்கள் இங்கேயே நான் சொல்லும் பூசையைச் செய்து வரவேண்டும். வேறு எவருடனும் பேசக்கூடாது. நான் சொல்வதுபோல் நடந்தால் நீங்கள் நினைத்தது எல்லாம் நடக்கும்'' எனக் கூறினான். அமைச்சனும் அவன் கூறியதைக் கேட்பதுபோலவே நடித்தான். துறவிக்குத் தன்மீது நம்பிக்கை வரவேண்டும் என்பதற்காகச் சில நாள்கள் அவன் கூறியவற்றையெல்லாம் கேட்டான். எவரையும் பார்க்காமல் ஒரே இடத்தில் இருந்து துறவி கூறியது போலப் பூசை செய்து வந்தான். சில நாள்கள் அமைச்சனைக் கவனித்துவந்த துறவி, அவன் தன்மீது உண்மையான நம்பிக்கை வைத்திருப்பதாகவே எண்ணினான். ஒரு நாள் "அமைச்சரே! நான் இப்போது என் உடலை இங்கேயே விட்டுவிட்டுத் தெய்வ உடலோடு தேவலோகம் போகப் போகிறேன். நீங்கள் அத் தெய்வ உடலைப் பார்க்க இயலாது. எனவே, இங்கேயே பூசையில் இருங்கள்'' என்று கூறி விட்டு ஓர் அறையினுள் சென்று கதவினைத் தாழிட்டான். அங்கு வந்துள்ள தன் கையாள்களோடு மன்னனைக் கொல்லச் சதி செய்துகொண்டிருந்தான். அவர்களோடு எப்படி மன்னனைக் கொல்வது? நாட்டைக் கைப்பற்றுவது? எனத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தான்.

அமைச்சன், துறவி அறைக்குள் சென்றதும் வெளிக் கதவினைத் தாழிட்டு விட்டான். மன்னனைச் சென்று கண்டான்; மன்னன் துறவியை முழுவதும் நம்பி யிருந்ததை அமைச்சன் உணர்ந்து கொண்டான்; துறவியைப்பற்றி எவ்வளவு கூறினாலும் மன்னன் நம்ப மாட்டான் எனத் தெரிந்துகொண்டான்; எனவே, மன்னனது நம்பிக்கையை வைத்தே துறவியை ஒழிக்க முடிவு செய்தான். மன்னனை நோக்கி, ''அரசே! இங்குள்ள துறவியார் அடிக்கடி தேவலோகம் சென்று வருவதாகக் கேள்விப்படுகிறேன். அத்தகைய தெய்வத் தன்மை வாய்ந்தவர் நம் நாட்டில் இருப்பது நம் பேறாகும்'' எனக் கூறினான். அமைச்சனும் தன்னைப் போலவே துறவியின் பெருமைபற்றி அறிந்து பக்தி செலுத்துகிறான் என எண்ணி மகிழ்ந்தான். உடனே அமைச்சனிடம், ''ஆம் மதிவாணரே! அவர் தெய்வத் தன்மை வாய்ந்தவர். இப்போதுகூடத் தேவலோகம் சென்றிருக்கிறார். மீண்டும் இங்கு வந்து தம் உடலில் புகுந்துகொள்வார். அவரைத் தெய்வ உடலோடு பார்க்கவேண்டும் என விரும்புகிறேன். ஆனால் துறவியார் அதனை ஒப்புக்கொள்ள மறுக்கிறார். என்ன செய்வது?'' எனக் கூறினான்.

அமைச்சன் இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டான். ''அரசே! இப்போது துறவியார் தம் மனித உடலை இந்த அறைக்குள் விட்டுவிட்டுத் தெய்வ உடலோடு தேவலோகம் சென்றிருப்பார். அவர் மீண்டும் வருவதற்குள் இந்த அறையைக் கொளுத்திவிடுவோம். அவரது உடல் எரிந்துபோய்விடும். தேவலோகம் சென்று திரும்பிய துறவியார் தம்முடைய உடலைக் காணமுடியாததால் அந்தத் தேவ உடலோடுதான் இருக்க வேண்டும். நாம் அவரைத் தேவ உடலோடு கண்டு மகிழலாம். இதனைத் தவிர வேறுவழி இல்லை'' என்றான். மன்னனும் துறவியின் தேவ உடலைக் காணவேண்டும் என்ற ஆவலில் அதற்கு இசைந்தான்,



உடனே அமைச்சன் துறவி இருந்த அறைக்குத் தீயிடச் செய்தான். தீயில் வெந்து கள்ளத் துறவியும் அவன் கையாள்கள் சிலரும் மாண்டனர். மற்றவர்களை அமைச்சன் கைது செய்தான். அரசன்முன் கொண்டு வந்து அவர்களை நிறுத்தினான். அவர்கள் செய்த குற்றங்களைச் சாட்சிகளுடன் மன்னனிடம் கூறினான். மக்கள் மன்னனைக் காண ஏற்பாடு செய்தான். மக்கள் கள்ளத் துறவி செய்த கொடுமைகளைக கூறினர். மக்கள் கூறியதைக்கேட்ட மன்னன் மனம் வருந்தினான். தான் இவ்வளவு நாள் அறிவுகெட்டு, கெட்டவன் ஒருவன் பேச்சைக் கேட்டதை எண்ணி வருந்தினான். தான் செய்த தவறுகட்காக மக்களிடம் மன்னிப்பு வேண்டினான்.

அமைச்சனைப் பார்த்து, ''அமைச்சரே! சரியான சமயத்தில் வந்து என்னைக் காத்தீர். உமது அறிவுத் திறனால் நான் கேட்டிலிருந்து தப்பினேன். நாடும் பிழைத்தது. இனி இத்தகைய வஞ்சகர்களை நம்ப மாட்டேன்'' எனக் கூறிப் பாராட்டினான்.

''வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டா''

—உலகநீதி

# 2. வறுமையில் செம்மை

நம் தாய்நாடாகிய இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர் பலர். அப்படிப்பட்ட நாட்டுப்பற்று மிக்க நல்லவர் பலர் தமிழகத்திலும் இருந்தனர். அவர்களுள் ஒருவரே 'கப்பலோட்டிய தமிழர்' எனப் போற்றப்படும் வ.உ. சிதம்பரனார் அவர்கள். நம் தாய் நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டுத் துன்பப் பட்டவர் அவர். வெள்ளையரை இந் நாட்டைவிட்டு வெளியேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டுப் பல ஆண்டுகள் சிறையில் துன்புற்றார். சிறைச்சாலையில் செக்கு இழுக்குமாறு கொடுமைப்படுத்தப்பட்டார். அத்தகைய நல்லவரின் வாழ்வில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சி ஒன்றை அறிந்துகொள்வது சிறப்புடையது

வெள்ளையர் இந்நாட்டில் வாணிகம் செய்ய வந்தனர்; தம் சூழ்ச்சியாலும் இந்திய மன்னர்களின் பொறுப்பற்ற தன்மையாலும் இந் நாட்டினை ஆளும் உரிமை பெற்றனர். ஆட்சி அவர்களிடம் இருந்ததால் வாணிகம் மூலம் பெரும்பொருளை இந்தியாவிலிருந்து இங்கிலாந்து கொண்டுசென்றனர்.

தம் வாணிகம் பெருக வேண்டுமென்பதற்காக இந்தியத் தொழில்களும் வாணிகமும் வளராமல் தடுத்தனர். இந்த நிலைகண்டு கொதித்தெழுந்தார் வ. உ. சிதம்பரனார். வெள்ளையரது வாணிகத்தினை எதிர்த்துப் போராடத் துணிந்தார். அப்போது கப்பல் மூலம் நடைபெறும் வாணிகப்பொருள் போக்குவரத்து முழுதும் வெள்ளையரிடமிருந்தது. வ. உ. சி. அவர்கள் 'இந்தியக் கப்பல் கழகம்' ஒன்றை நிறுவ முடிவு செய்தார்.

நல்லவர் பலரின் பொருள் உதவியோடு இரண்டு கப்பல்களை வாங்கினார். தூத்துக்குடித் துறைமுகத்தி லிருந்து பொருள்களை ஏற்றிச்செல்லும் பணியில் இரு கப்பல்களும் ஈடுபட்டன. வ.உ.சி. அவர்கள் இந்திய வாணிகர் அனைவருக்கும் ''இந்தியக் கப்பல் மூலமே பொருள்களை அனுப்ப வேண்டும்'' எனப் பணிவான வேண்டுகோள் விடுத்தார். நாட்டுப் பற்றுமிக்க நல்ல வாணிகர் பலர் இந்தியக் கப்பல்மூலமாகத் தம் பொருள் களை அனுப்பினர்.

கப்பல் வாணிகம் சிறிதுசிறிதாக வளர்ந்தது இதனைக் கண்ட வெள்ளையர் கவலையடைந்தனர். இந்தியாவில் தமது வாணிகம் குறையும் என அஞ்சினர். மேலும் இந்திய மக்களிடம் நாட்டுப்பற்று மிகுந்து தம் ஆட்சிக்கே இடையூறு ஏற்படக் கூடும் எனப் பயந்தனர்.

எனவே, இந்தியக் கப்பல் கழகத்தை அழித்துவிடும் முயற்சிகளில் ஈடுபட்டனர். தங்கள் கப்பல் மூலம் குறைந்த கட்டணத்தில் பொருள்களை ஏற்றிச் செல்வதாக வாணிகர்களுக்கு ஆசை காட்டினர். நாட்டுப்பற்றில்லாத வாணிகர் சிலர் அந்த வலையில் சிக்கித் தங்கள் பொருள்களை ஆங்கிலக் கப்பல்மூலமே அனுப்பத் தொடங்கினர். எனவே, இந்தியக் கப்பல் நிறுவனத்தின் வருவாய் குறைந்தது. அதனால் இந்தியக் கப்பல்கள் ஓடமுடியாமல் செய்வதற்கான எல்லாச் செயல்களையும் வெள்ளையர் செய்ய முற்பட்டனர்.

வ. உ. சி. மனம் கலங்கினார். தம் பேச்சுவன்மை யால் ஆங்கில அரசை எதிர்த்தார். இந்தியர் இந்திய வாணிகத்தினை ஆதரிக்கவேண்டுமெனத் தீவிரமாகப் பல இடங்களில் பேசினார். அவருக்குத் துணையாகச் சுப்பிரமணிய சிவா போன்ற நல்லவர்கள் இருந்தார்கள். இளைஞர் பலர் வாணிகர் பலரை நேரில் சென்று



வேண்டிக்கொண்டு பொருள்களை இந்தியக் கப்பல்மூலம் அனுப்புமாறு செய்தனர். இதனால் இந்திய வாணிகர் பலர் மனம் மாறிக் கட்டணத்தைப் பொருட்படுத்தாமல் இந்தியக் கப்பல்களில் தம் பொருள்களை அனுப்பினர். மீண்டும் கப்பல் நிறுவனம் புத்துயிர் பெற்றது.

வெள்ளையர் முயற்சிகள் தோல்வியடைந்தன. எனவே, ஆங்கில அரசினர்க்கு வ.உ.சி.மீது மிகுந்த ஆத்திரம் ஏற்பட்டது. ''வ.உ.சி. அவர்களால்தாம் இந்தியக் கப்பல் நிறுவனம் நன்கு நடைபெறுகிறது. அவரை ஒழித்துவிட்டால் நிறுவனம் நடைபெறாது'' என எண்ணினர்.

எனவே, வ.உ.சி. அவர்களுக்குப் பல தொல்லைகள் தந்தனர். அவர் நடத்திவந்த வழக்குரைஞர் தொழிலுக்கான உரிமையைப் பறித்தனர். எனவே, அவர் வழக்குரைஞராகத் தொழில் நடத்த முடியவில்லை. அவருக்கு வருவாய் குறைந்தது. குடும்பத்தில் வறுமை மிகுந்தது. மேலும் வ.உ.சி. மீது பல பொய் வழக்குகளைத் தொடுத்து அவரைச் சிறையில் அடைத்தனர். ஆயினும் வ.உ.சி.யினுடைய தளரா முயற்சியாலும் ஊக்கத்தாலும் கப்பல் நிறுவனம் நடைபெற்றுவந்தது.

பல துன்பத்திற்கு உள்ளாக்கியபோதும் கலங்காமல் இருந்த வ.உ.சி.யைக் கண்டு ஆங்கிலேயர் வியந்தனர்; அச்சுறுத்தி இவரைப் பணியவைக்க முடியாது என அறிந்தனர்; அவரது குடும்பத்தின் வறுமை நிலைமையைக் கண்டனர். எனவே, பொருளாசை காட்டி அவரைப் பணியவைக்க முடிவெடுத்தனர். அதன்படி வெள்ளையர் வ.உ.சி. அவர்களை அழைத்தனர். ''உங்கள் குடும்பம் வறுமையில் உள்ளது. நீங்கள் நாட்டுக்கு உழைப்பதால் உங்களுக்கு என்ன பயன்? உங்கள் மனைவி மக்கள் வளமாக வாழ நீங்கள் வழிதேடிக் கொள்ள வேண்டாவா? எனவே, நாங்கள் கொடுக்கும் பெருந் தொகையைப் பெற்றுக்கொள்ளுங்கள். அதற்குப்

பதிலாக இந்தியக் கப்பல் நிறுவனத்தின் பொறுப்பிலிருந்து நீங்கள் நீங்கிவிடுங்கள். அப்படிச் செய்தால் ஆங்கில அரசு உங்களுக்கு மேலும் பல நன்மைகள் செய்யும்'' எனக் கூறி ஆசைகாட்டினர். பெருந்தொகை கொண்ட பணமுடிப்பையும் அவரிடம் தந்தனர்.

அந்தக் காலத்தில் அவருக்கு ஆங்கிலேயர் தருவதாகச் சொன்ன பொருள் மிக அதிகம். வறுமை நிலையில் வாடியிருந்த வ. உ. சி. அவர்கள் நினைத்திருந்தால், அந்தத் தொகையைப் பெற்றுக்கொண்டு வளமாக வாழ்ந்திருக்கலாம். ஆனால், நாட்டுப்பற்றும் நேர்மையும் அஞ்சாமையும் பெற்றிருந்த வ.உ.சி. அவர்கள் அத் தொகையைப் பெறாமல் ஆங்கிலேயருக்கு ஏமாற்றத்தைத் தந்து வெளியேறினார். அதற்குப் பிறகு மேலும் தீவிரமாக விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்தார். மிகுந்த வறுமைநிலையில்கூட நேர்மையிலிருந்து மாறாத அவரது மன உறுதி வியக்கத் தக்கதன்றோ?

''கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே.'' —மூதுரை

''புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.'' —பழமொழி

# 3. வில் வீரன்

ஐரோப்பாக் கண்டத்தில் சுவிட்சர்லாந்து நாடு உள்ளது. அந் நாட்டில் வில்லியம் தெல் என்ற மலைவாசி ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன் உடல்வலிமை உடையவன்; உள்ள உறுதி உடையவன். அவன் நாடு அவனுக்கு உயிர்.

இளமையில் கல்வி கற்பதற்கு வேண்டிய வசதிகள் அவனுக்குக் கிடைக்கவில்லை. வேட்டையாடுவதே அவன் தொழில். குறி தவறாமல் அம்பு எய்வதில் மிகவும் கெட்டிக்காரன்.

ஆத்திரிய நாட்டை ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவன் மண்ணாசை பிடித்தவன். சுவிட்சர்லாந்து நாட்டின்மீது அவன் படையெடுத்துவந்தான். பெரும் போர் நடந்தது. கடைசியில் ஆத்திரிய மன்னன் வெற்றி பெற்றான். அவன் சசுலர் என்னும் ஒருவனை அந் நாட்டிற்குத் தலைவனாக்கினான். சசுலர் இரக்கம் இல்லாதவன். அவன் கொடுங்கோல் ஆட்சிபுரியத் தொடங்கினான்; மக்களை மக்களாகவே மதிக்க வில்லை; ஆடுமாடுகளைப்போல் எண்ணிக் கொடுமைப் படுத்தினான்.

ஏழைகள் என்ன செய்வர்? மிகவும் துன்புற்றனர். பொறுக்கமுடியாத துன்பத்தினால், கண்ணீர் சிந்தினர். மக்கள் அழுத கண்ணீர் அவன் மனத்தை கரைக்க வில்லை. அரச பதவியின் ஆணவம் அவன் அறிவை மழுங்கவைத்தது. அந்தக் கொடியவனிடம் சென்று யாரும் எடுத்துச் சொல்லவும் துணியவில்லை.

சசுலர் வெட்டவெளியில் தூண் ஒன்றை நிறுத்தி னான். அதன்மேல் தொப்பி ஒன்றை மாட்டினான். அவ்விடத்தில் வீரர் சிலரைக் காவலுக்கு நிறுத்தினான். வீரர்கள் இரவும் பகலும் காவல் காத்தனர். அந்தத் தூண் நிறுத்தப்பட்டுள்ள வழியாக வருகின்றவர் எவராக இருந்தாலும் முழங்கால் மண்டியிட்டு அந்தத் தொப்பிக்கு வணக்கம் செலுத்த வேண்டும். எவரேனும் அந்தத் தொப்பிக்கு வணக்கம் செலுத்தாமல் போனால் கடுந்தண்டனைக்கு ஆளாவார்கள். அதற்கு உடன் படாத் சிலரைச் சசுலர் கொன்றுவிட்டான்.

அடிமை வாழ்வு வாழ விரும்பாத சிலர் மலைப் பக்கங்களில் சென்று மறைந்து வாழ்ந்தனர். அவ்வூரி லேயே தங்கியிருந்த சிலர் அந்தத் தூண் நிறுத்தப் பட்ட வழியாகச் செல்வதையே விட்டுவிட்டனர். இன்றி யமையாத செயலை முன்னிட்டு வேறு வழியின்றி அவ் வழியே செல்ல நேரிட்டபோது வெறுப்பு உணர்ச்சியோடு ஒருசிலர் அந்தத் தொப்பிக்கு வணக்கம் செலுத்திவிட்டுச் சென்றனர். பொதுவாக அந் நாட்டு மக்கள் அனை வருக்கும் அந்நிகழ்ச்சி உள்ளக் கொதிப்பை உண்டாக்கி விட்டது. அவனுடைய ஆணவப்போக்கு யாருக்கும் பிடிக்கவில்லை.

வில்லியம் தெல் ஒரு நாள் காட்டில் வேட்டை யாடியபின் களைப்புடன் வீடு திரும்பினான். அன்று அவன் வந்த வழியில் தொப்பி இருந்தது. தொப்பிக்கு வணக்கம் செலுத்தவேண்டும் என்பதை அவன் அறிய வில்லை. அவன் அந்தத் தூணைக் கடந்து நேரே போய்க்கொண்டிருந்தான். உடனே அங்குக் காவல் புரிந்துவந்த வீரர்கள் ஓடிவந்தனர். வில்லியம் தெல்லைச் சூழ்ந்துகொண்டனர். அவனை இறுகப் பிடித்துக் கொண்டுபோய்ச் சசுலர்முன் நிறுத்தினர் 'தொப்பிக்கு இவன் வணக்கம் செலுத்தவில்லை' என்று கூறினர்.

சசுலர், ''அடே! நீ ஏன் தொப்பிக்கு வணக்கம் செய்யவில்லை?'' என்றான்.

வில்லியம் தெல், ''உயிரில்லாத தொப்பிக்கு வணக்கம் செலுத்துவது என் பழக்கம் இல்லை'' என்று அஞ்சாமல் பதில் கூறினான். சசுலர் கோபமாக ''நீ என் தொப்பிக்கு மரியாதை செலுத்தாததோடு என்னையும் அவமானப்படுத்திவிட்டாய். இக் குற்றத்திற்கு மரண தண்டனைதான் விதிக்கவேண்டும். ஆனால் நீ ஒரு வீரனாக இருப்பதால், உனக்கொரு பந்தயம் வைக்கிறேன். அதில் நீ வெற்றிபெற்றால் உன்னை விடுதலை செய்கிறேன். இல்லையானால் நீ இறப்பது உறுதி'' என்றான்.

வில்லியம் தெல் அமைதியாக ''என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான்.

அப்போது வில்லியம் தெல்லின் மகன் 'அப்பா! அப்பா!' என்று அழைத்துக்கொண்டே அங்கு ஓடி வந்தான். தெல்லின் இரண்டு கால்களையும் இறுகக் கட்டிப் பிடித்துக்கொண்டான்.

கொடுமையே உருவாக அமைந்த சசுலர் தெல்லின் குடும்பத்தையே அழித்துவிடவேண்டும் என்று திட்டமிட்டான். அதற்கான எண்ணத்துடன் ''வில்லியம்! நீ வில்வித்தையில் பெரிய வீரனாயிற்றே! இப்பொழுது நான் உன் ஆசை மகனின் தலைமேல் அழகிய ஒரு பழத்தை வைக்கிறேன். சிறிது தொலைவில் அவனை நிறுத்திவைக்கிறேன். குறி தவறாமல் நீ அந்தப் பழத்தின்மீது அம்பு எய்து வீழ்த்தினால் உனக்கு விடுதலை அளிப்பேன் இல்லையானால் நீ இறப்பாய்!'' என்றான்.

சசுலர் சொல்லியபடியே வில்லியம் தெல்லின் மகனைத் தொலைவில் நிறுத்தினான். சிறுவனின்



தலையில் ஓர் ஆப்பிள் பழத்தை வைத்தான். அம்பு எய்து அந்த ஆப்பிளை வீழ்த்துமாறு ஆணையிட்டான்.

நாடு அடிமைப்பட்டிருந்த அந்த நிலையில் வில்லியம் தெல்லால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆணைக்கு அடங்குவது ஒன்றே அப்பொழுது செய்யக் கூடிய செயலாக இருந்தது. எதிரிலே நிறுத்தப்பட்டிருந்த மகனைப் பார்த்ததும் தெல்லுக்குத் துயரம் தாளமுடியவில்லை. தன் மகனைத் தன் கை அம்பினாலேயே கொல்லும்படியாக ஆகிவிட்டால் என்ன செய்வது என்று எண்ணிச் சொல்லமுடியாத துன்பம் அடைந்தான்.

பிறர் துன்பத்தில் இன்பம் காண்பதே கொடியவர்களின் செயலாகும். சசுலர் வில்லியம் படும் மனவேதனையைக் கண்டு சுவைத்துக் கொண்டிருந்தான். தன்னுடைய புத்திசாலித்தனத்தால் மகனையும் தந்தையையும் ஒருசேரப் பழிவாங்கிவிட்டதாகப் பூரித்துக் கொண்டிருந்தான்.

வேறு வழி இல்லாமையால் வில்லியம் தெல் தன் மகன் தலையில் வைக்கப்பட்டிருந்த ஆப்பிள் பழத்தைக் குறிபார்த்து அம்பு எய்தான். இறைவன் அருளால் வில்லியம் தெல் எய்த அம்பு ஆப்பிளைப் பிளந்து கொண்டு 'விர்'ரென்று பாய்ந்து சென்றது. பயந்து நடுங்கிக்கொண்டிருந்த சிறுவன் 'அப்பா!' என்று அலறிக்கொண்டு ஓடிவந்தான். வில்லியம் தெல் தன் மகனைத் தழுவிக்கொண்டான். அங்குக் கூடியிருந்த மக்களும் கொடுமையே உருவான சசுலரும் வியப்போடு அக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

சசுலர் தன் எண்ணம் மண்ணாகிப் போனதை நினைத்து வருந்தினான். இருந்தாலும் அவனுடைய தீய எண்ணம் போகவில்லை.

வில்லியம் தெல் தன் மகன் தலையில் இருந்த ஆப்பிளைப் பிளக்க அம்பு எய்த பிறகு மற்றோர்

அம்பைக் கையில் எடுத்தான். சசுலர் அதனைக் கவனித்துவிட்டான். எனவே, அவன் வில்லியம் தெல்லைப் பார்த்து "அடே! நீ ஓரம்பு எய்த பிறகு மற்றோர் அம்பை ஏன் எடுத்தாய்?" என்றான்.

வில்லியம் தெல் சிறிதும் அஞ்சாமல் அமைதியாக, 'முதல் அம்பு குறி தவறி என் உயிரனைய மைந்தனைக் கொன்றுவிட்டால் அடுத்த நொடியே உன்னையும் விண்ணுலகிற்கு விருந்தாக அனுப்பவே இரண்டாவது அம்பை எடுத்தேன்?" என்றான்.

சசுலருக்கு அடக்கமுடியாத கடுங்கோபம் பொங்கி எழுந்தது. உடனே தன் ஆள்களை அழைத்தான் வில்லியம் தெல்லைச் சிறையில் அடைக்கும்படி கட்டளை இட்டான்.

வீரர்கள் பாய்ந்துசென்று வில்லியம் தெல்லைப் பிடித்துக் கெட்டியாகக் கட்டினர். சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றனர். சிறைச்சாலை ஓர் ஏரிக்கு அப்பால் ஒரு குன்றின்மேல் இருந்தது. வீரர்கள் தெல்லை ஒரு படகில் ஏற்றினர். சசுலர் தானும் அந்தப் படகிலேயே அமர்ந்து படகைச் செலுத்துமாறு பணித்தான். படகு ஏரியின் நடுவே சென்றுகொண்டிருந்தது. எங்கிருந்தோ திடீரெனப் புயல் வீசத் தொடங்கிற்று. படகைச் செலுத்தியவர்கள் புதியவர்கள். கரைக்கு எப் பக்கம் செல்வது என்றே அவர்களுக்குத் தெரியவில்லை, அவர்கள் திக்குத் தெரியாமல் திண்டாடினர். கொடியவனான சசுலர் தவியாய்த் தவித்தான். "வீரர்களே! இம் முரடனின் கைவிலங்கைக் கழற்றி விடுங்கள். இவனுக்கு வழி தெரியும். இவனே படகைக் கரைக்கு ஓட்டிச் செல்வான்" எனக் கூறினான். வீரர்கள், வில்லியம் தெல்லின் கை விலங்கைக் கழற்றினர். வில்லியம் தெல் படகைத் திசையறிந்து செலுத்தினான்.

படகு கரையை நோக்கி வந்தது. அப்பொழுது வில்லியம் தெல் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப்போல் காணப்பட்டான். மிகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தான். அவன் படகிலிருந்து குபீரெனத் தாவிக் குதித்தான். படகு பாறையில் மோதிக் கவிழுமாறு வேகமாகத் தள்ளினான். படகு பாறையில் மோதிற்று. படகு உடைந்தது. சசுலரும் வீரர்களும் ஏரியில் மூழ்கி மாண்டனர்.

*"கூரம் பாயினும் வீரியம் பேசேல்."*

*—கொன்றைவேந்தன்*

*"கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்*
*கடும்புலி வாழும் காடு நன்றே."* *—வெற்றிவேற்கை*

# 4. கோயில் பாறை

நம் நாடு முற்காலத்தில் பல பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அப் பிரிவுகளில் நடுநாடு என்பது ஒன்று. அந் நடுநாட்டில் திருவாமாத்தூர் என்று ஓர் ஊர் உண்டு. அவ்வூரின் கோயிலில் முன்னாளில் ஓர் ஆற்றல் வாய்ந்த பாறை இருந்தது. அப் பாறையின் முன் 'பொய் சொல்லுபவர் இறந்துபோவார்கள்' என்பது அக்கால மக்களின் நம்பிக்கை.

திருவாமாத்தூரில் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் கெட்ட குணங்கள் உடையவன். பொய் கூறியே தன் வாழ்நாளைக் கழித்தான். சூதாடுதல், களவாடுதல் போன்ற தீய பழக்கங்கள் அவனிடம் மிகுதியாக இருந்தன. அவன் திருவாமாத்தூரில் இருந்த அந்தப் பாறையைப்பற்றி மிகவும் இழிவாக நினைத்திருந்தான். அதனைத் தான் ஏமாற்றிவிட முடியும் எனவும் நம்பியிருந்தான். எனவேதான் அவன் பொய் சொல்ல அஞ்சவில்லை.


அவனுக்குத் தம்பி ஒருவன் இருந்தான். அவன் மிகவும் நல்லவன். எவ்விதத் தீய பழக்கமும் அவனிடம் இல்லை; நேர்மையாக வாழ்ந்துவந்தான். இவ்விரு வருக்கும் மிகுந்த செல்வம் இருந்தது. அவர்களது முன்னோர்கள் பெரும் பொருள் சேர்த்துவைத் திருந்தனர். கொடியவனாகிய அண்ணன் எல்லாப் பொருளையும் தானே எடுத்துக்கொள்ள எண்ணினான். தன் தம்பிக்கு எதுவும் கொடுக்காமல் ஏமாற்றிவிட முடிவு செய்தான். எனவே, அவன் எல்லாப் பொருள்களையும் விற்றுத் தங்கக் கட்டிகளாக மாற்றிவிட்டான். இச்

செய்தி தம்பிக்குத் தெரியாது. நீண்டநாள் பொருள் சம்பாதிக்க வெளியூர் சென்று விட்டமையால் அண்ணன் பொருள்களை எல்லாம் விற்றதை அவன் அறியவில்லை.

அண்ணன் தங்கத்தை எல்லாம் ஒருவரும் அறியாமல் வைத்திருக்க வழி தேடினான். ஒரு பெரிய மூங்கில் தடியை எடுத்தான், அதனை நன்கு துளைத்தான். தங்கக் கட்டிகளை எல்லாம் அதனுள் போட்டான். எப்போதும் அத் தடியைத் தன் கையிலேயே வைத்திருந்தான். பார்த்தவர்கள் எல்லாம் அவன் வெறும் கைத்தடி வைத்திருப்பதாகவே எண்ணினர்.

வெளியூர் சென்றிருந்த தம்பி திரும்பிவந்தான். தங்கள் குடும்பப் பொருள்கள் அண்ணனால் விற்கப் பட்டமையை அறிந்தான். ஊரில் உள்ளவர்களும் அப்போதுதான் அண்ணனது வஞ்சகத்தை அறிந்தனர். அவர்கள் தம்பியைப் பார்த்து, "உன் அண்ணன் உன் பங்கினையும் விற்றுவிட்டான். நீ சென்று உனக்குரிய பங்கினைக் கேட்டு வாங்கிவிடு" எனக் கூறினர். உடனே தம்பி அண்ணனிடம் சென்றான். "நம் முன்னோர் தேடிவைத்த பொருள்கள் எங்கே? எனக்குரிய பங்கினை எனக்குக் கொடுத்துவிடு" எனக் கேட்டான். அதற்கு அவன் அண்ணன், "நம் குடும்பத்தில் மிகுந்த கடன் இருந்தது. நம் முன்னோர் தேடிவைத்த பொருள் அந்தக் கடனுக்குச் சரியாகிவிட்டது. உன்னை நான் ஏமாற்றிப் பொருளை வைத்திருக்கவில்லை. உனக்கு நம்பிக்கையில்லை என்றால் என் வீட்டிற்கு வந்து பார்" எனக் கூறினான். தம்பி, அண்ணன் வீட்டிற்குச் சென்று பார்த்தான். அங்கு எப்பொருளும் இல்லை. அவன் மனம் வருந்தினான்.

ஊர் மக்கள் நடந்ததைக் கேட்டு வருந்தினர். அண்ணன், பொருள்களை எங்கு வைத்துள்ளான் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. எனவே, அவர்கள்



அண்ணனை நேரில் கேட்டுவிட முடிவு செய்தனர். அனைவரும் அண்ணனிடம் சென்றனர். "நீ உன் தம்பியை ஏமாற்றாதே. அவனுக்குச் சேரவேண்டியதை அவனிடம் கொடுத்துவிடு'' என்றனர். அதற்கு அண்ணன், "நான் அவனை ஏமாற்றவில்லை. நான் என் குடும்பக் கடனை அடைத்தேன். என் தம்பிதான் என்னை ஏமாற்றிப் பொருள்களை ஒளித்துவைத்துள்ளான்'' எனக் கூறினான். ஊரார் அப்படியானால் கோயிலில் உள்ள பாறையின்முன் வந்து, "நான் என் தம்பிக்குரிய பொருளை வைத்திருக்கவில்லை என்று உறுதி கூறு. அப்போதுதான், நாங்களும் உன் தம்பியும் நம்புவோம்'' என்றனர். அண்ணன், "நான் ஏமாற்ற வில்லை. பொய் பேசவும் இல்லை. எனவே பாறையின் முன் வந்து உறுதி கூறுகிறேன். எனக்குப் பயம் ஒன்றும் இல்லை'' எனக் கூறினான். அவ்வூர்க் கோயிலில் உள்ள பாறையின்முன் அனைவரும் கூடினர். மூத்தவன் தன் கையில் இருந்த தடியைத் தம்பியிடம் கொடுத்து, "இதனை வைத்துக்கொள்'' எனக் கூறினான். தம்பியும் மூங்கில் தடியை வாங்கித் தன் கையில் வைத்துக் கொண்டான்.

அண்ணன் பாறையின்முன் சென்றான்; பயபக்தி யுடையவன்போல் நடித்துப் பாறையைத் தொட்டுக் கும்பிட்டான். "தெய்வத்தன்மை பொருந்திய பாறையே! என் முன்னோர்கள் சேர்த்த பொருள் ஒன்றும் இப்போது என்னிடம் இல்லை. அவை எல்லாம் இப்போது என் தம்பியிடந்தான் உள்ளன. இது முற்றிலும் உண்மை'' எனக் கூறினான். அவன் கூறியதைக் கேட்ட அனைவரும், "இவன் இப் பாறையின்முன் இப்படிப் பொய் கூறுகிறானே! இவனை இப் பாறை கொன்றுவிடும். பொய் கூறுபவரையும் வஞ்சகரையும் இந்தப் பாறை பழிவாங்காமல் விடாது'' எனப் பேசிக் கொண்டனர் ஆனால், பாறை அவனை ஒன்றும் செய்யவில்லை

பின்னர்த் தடியைத் தம்பியிடமிருந்து பெற்றுக்கொண்டு சென்றான்.

மக்கள், ''இவன் ஏமாற்றவில்லைபோலும். அதனால்தான் பாறை இவனைத் தண்டிக்கவில்லை. நாம்தான் இவனைத் தவறாக எண்ணிவிட்டோம்'' எனப் பேசிக் கொண்டனர். தம்பிக்கு ஒன்றும் விளங்க வில்லை. அண்ணன் கூறுவது பொய் என்பது அவனுக்குத் தெரியும். அப்படியானால் ''பாறை ஏன் அவனைத் தண்டிக்கவில்லை'' என அறியாமல் திகைப்பு அடைந்தான். ''பாறையே நீயும் பொய் பேசுபவர்க்குத் துணை செய்கிறாயா? நீயுமா ஏமாற்றுகிறாய்?'' என அழுது புலம்பினான். மற்றவர்கள் அவனைத் தேற்றி அழைத்துச் சென்றனர்.

மூத்தவன் செய்தவை அனைத்தும் அவனுடன் சேர்ந்து இருந்த சிலருக்கு நன்றாகத் தெரியும். அவர் களும் அவனைப்போன்ற வஞ்சகர்களே. இந்தச் செயல் அவர்களுக்கும் பெரிய வியப்பாக இருந்தது. 'இவன் பொய் சொல்வதால் பாறை இவனைத் தண்டித்துவிடும்' என அவர்களும் அஞ்சியிருந்தனர். இப்போது அப் பாறைமீதிருந்த அச்சம் அகன்றுவிட்டது. அவர்கள் உண்மையை அறிய விரும்பி அண்ணனைப் பார்த்து, ''நீ உன் தம்பியை ஏமாற்றிப் பொருளை மறைத்ததை நாங்களும் அறிவோம். அப்படியிருந்தும் நீ கூறிய பொய்யினால் அப் பாறை உன்னைத் தண்டிக்க வில்லையே ஏன்? இது எங்களுக்கு வியப்பாக இருக் கிறது'' என்றனர்.

"உங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். இந்தப் பாறையை நான் என் அறிவினால் ஏமாற்றிவிட்டேன். என் கைத்தடியில்தான் எல்லாப் பொருள்களும் தங்கமாக இருக்கின்றன. நான் பாறையின்முன் உறுதி மொழி சொல்லும்போது கைத்தடியை என் தம்பியின்

கையில் கொடுத்துவிட்டேன். எனவே, 'முன்னோர் பொருள் முழுவதும் என் தம்பியிடமே உள்ளன' எனக் கூறினேன். அது பொய்யில்லை அன்றோ? எனவே தான் பாறை என்னைக் கொல்லவில்லை. அறிவினால் நாம் தெய்வத்தைக்கூட ஏமாற்றிவிடலாம்'' எனச் செருக்கோடு கூறினான். அவன் கூறியதைக் கேட்ட தீய நண்பர்கள் கைகொட்டிச் சிரித்தனர். அப்போது ஒரு பெரிய பாம்பு அங்கு வந்து அண்ணனைத் தீண்டியது. பாம்பினைக் கண்டதும் மற்றவர் ஓடி விட்டனர். உதவி செய்ய ஒருவருமில்லை. நஞ்சு தலைக்கு ஏறி அண்ணன் இறந்துபோனான்.

*''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்*
*அறன்சூழும் சூழ்ந்தவன் கேடு.''* —திருக்குறள்

*''வஞ்சித்து ஒழுகும் மதியிலிகாள்! யாவரையும்*
*வஞ்சித்தோம் என்று மகிழன்மின்—வஞ்சித்த*
*எங்கும் உளன்ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி*
*அங்கம் குலைவது அறிவு.''* —நீதிநெறி விளக்கம்

# 5. நல்லானும் சின்னானும்

முன்னொரு காலத்தில் வள்ளியூர் என்னும் ஊரில் சின்னான், நல்லான் என இருவர் வாழ்ந்துவந்தனர். சின்னான் படிப்பில்லாதவன். நல்லான் ஓரளவு படித்தவன். சின்னான் இளமையிலிருந்தே தீய குணங்கள் உடையவனாயிருந்தான்; பிறரை ஏமாற்றியும் அச்சுறுத்தியும் வாழ்ந்துவந்தான்; உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணமில்லாதவன்; பிறரது முயற்சியில் வந்த பொருளை ஏமாற்றித் தன் வாழ்க்கையை நடத்திவந்தான்.

நல்லான் இயல்பாகவே நல்ல குணம் உள்ளவன்; தன் உடல் வருந்தி உழைத்து அதனால் வந்த பொருளைக் கொண்டு வாழ்ந்துவந்தான்; குறைவாக வருவாய் வந்தபோதிலும் அதனைக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தான்.

நல்லானும் சின்னானும் இளமை முதல் நண்பர்கள். நல்லானிடம் சின்னான் நல்லவன்போலவே நடித்து வந்தான்.

வள்ளியூரில் ஒருசமயம் கொடிய பஞ்சம் வந்தது மக்கள் உணவின்றி வருந்தினர். நல்லானுக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை. அவன் வறுமையால் துன்பமடைந்தான். வெளியூருக்குச் சென்று ஏதேனும் வேலை தேடிப் பிழைக்கலாம் என எண்ணினான்.

சின்னானும் மிகவும் துன்பமடைந்தான். ஒரு நாள் நல்லான் சின்னானைச் சந்தித்தான். அவனிடம், "நண்பா! நான் வெளியூர் செல்ல முடிவுசெய்துள்ளேன்.

ஏதேனும் வேலை செய்து பிழைக்கலாம். நமது ஊரில் பஞ்சம் நீங்கியதும் திரும்பலாம். கடுமையாக உழைத்தால்தான் நிறையப் பொருள் கிடைக்கும். ஊர் திரும்பியதும் அப் பொருளைக்கொண்டு ஏதேனும் தொழில் செய்து பிழைத்துக்கொள்ளலாம் என்று எண்ணியுள்ளேன்,'' எனக் கூறினான். சின்னான், ''நண்பா! நானும் உன்னோடு வருகிறேன். இருவரும் சேர்ந்தே உழைப்போம். பொருள் மிகுதியாகச் சேர்ந்தால் இருவரும் ஊர் திரும்பிவிடுவோம்'' எனக் கூறினான். ''தனியே செல்வதைவிட நண்பனும் உடன் வந்தால் நல்லது.'' என நல்லான் எண்ணினான், உடனே அவனையும் உடன் அழைத்துச்சென்றான்.

இருவரும் நெடுந்தூரத்திலுள்ள நகரத்தை அடைந்தனர். அவர்களுக்கு வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. ஊரிலிருந்தால் யாராவது சாப்பிட உணவாவது கொடுப்பார்கள். நகரத்தில் ஒருவரும் ஒன்றும் தரவில்லை. நல்லானும் சின்னானும் அலைந்து திரிந்து களைப்படைந்தனர். இரவு வெகுநேரம் ஆகிவிட்டது. இருவரும் சோர்ந்து ஒரு வீட்டின் முன்புறத்தில் படுத்தனர்.

அந்த வீடு ஒரு பெரிய பணக்காரருடையது. நள்ளிரவு நேரம். சின்னான் நன்கு தூங்கிக்கொண்டிருந்தான். நல்லானுக்குத் தூக்கம் வரவில்லை; தன் வறுமை நிலையை எண்ணி வருந்திக்கொண்டிருந்தான். திடீரென்று வீட்டின் உள்ளிருந்து ஏதோ கூச்சல் கேட்டது. யாரோ சிலர் நடமாடும் ஓசை கேட்டது. சிறிது நேரத்தில் ஒருவர் 'ஐயோ' என அலறும் குரல் கேட்டது. நல்லான் சின்னானை எழுப்பினான். ஆனால் அவன் எழவில்லை. நல்லான் எழுந்து பக்கத்தில் இருந்த சாளரத்தின் வழியே உள்ளே பார்த்தான். உள்ளே இரண்டு முரடர்கள் கையில் கத்தியுடன் காணப்பட்டனர். அவர்கள் இருவரும் வீட்டுக்காரரைக் கொலைசெய்ய

முயன்றார்கள். நல்லானுக்குப் பயமாயிருந்தது. ஆயினும் வீட்டுக்காரர் கதறியழுததைப் பாத்ததும் மனம் இரங்கினான். எப்படியாவது வீட்டுக்காரரைக் காப் பாற்றவேண்டும் என முடிவுசெய்தான். உடனே உள்ளே நுழைந்தான். திடீரென நல்லான் வந்ததைக் கண்ட முரடர்கள் நல்லானைத் தாக்க முயன்றனர். நல்லான் நல்ல உழைப்பாளி. எனவே, அவன் உடல் உறுதி யுடன் இருந்தது. நல்லான் முரடன் கையிலிருந்த கத்தியைத் தட்டிவிட்டான். அதனை எடுக்கத் தலை குனிந்த முரடனைப் பலம்கொண்டமட்டும் உதைத்தான். அவன் பக்கத்தில் இருந்த தூணில் மோதிக்கொண்டான்; அதனால் மயக்கமடைந்தான். மற்றொரு முரடன் அதனைப் பார்த்ததும் தப்பி ஓடிவிட்டான். வீட்டுக்காரர் உயிர் பிழைத்தார். அடிபட்ட முரடனைக் காவலரிடம் ஒப்படைத்தான் நல்லான்.

அந்தப் பணக்காரர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். சின்னான் விழித்துக்கொண்டான்; நடந்ததைக் கேட்டு வியப்படைந்தான். அச் செல்வர் நல்லானிடம், ''தம்பி! நல்ல சமயத்தில் நீ வந்தாய். உன் உயிரைப்பற்றிக் கூடக் கவலைப்படாமல் என்னுயிரைக் காப்பாற்றினாய். உனக்கு எந்த ஊர்? எங்கு வந்தாய்?'' எனக் கேட்டார். நல்லான், ''ஐயா! நானும் என் நண்பன் சின்னானும் பிழைப்புத் தேடி இவ்வூர் வந்தோம். இரவு உங்கள் வீட்டின் முன்புறம் படுத்திருந்தோம். உள்ளே ஓசை கேட்டு ஓடிவந்தேன். என் கடமையைச் செய்தேன்'' எனப் பணிவோடு கூறினான். அப் பணக்காரர் மகிழ்ந்து ''தம்பி! என் உயிரைக் காத்த உனக்கு என் நன்றி. உனக்கு நான் ஆயிரம் தங்க நாணயங்களைப் பரிசாகத் தருகிறேன். இதனைக்கொண்டு ஏதேனும் தொழில் செய்து நீயும் உன் நண்பனும் பிழைத்துக்கொள் ளுங்கள்,'' எனக் கூறித் தங்க நாணயங்களைக் கொடுத்தார். நல்லான் செல்வருக்கு நன்றிகூறி,

நண்பனுடன் ஊருக்குப் புறப்பட்டான்; தனக்குக் கிடைத்த பரிசில் நண்பனுக்கும் பாதி தந்தான்.

சின்னான் பேராசை கொண்டவன். பெரும் பகுதி நாணயங்களைத் தானே எடுத்துக்கொள்ளவேண்டுமென எண்ணினான். நல்லானை ஏமாற்றி நாணயங்களைப் பெற முடிவு செய்தான். உடனே நல்லானிடம், "நண்பனே! திடீரென்று மிகுந்த தங்க நாணயங்களுடன் ஊர் செல்லவேண்டா. நமது உறவினர் பலரும் வந்து கேட்பார்கள். வேறு சிலர் நம்மீது ஐயம் கொள்வார்கள். எனவே, நாம் சிறிதுசிறிதாக எடுத்துச் செல்வதே மேல்," எனக் கூறினான். நல்லானுக்குச் சின்னானுடைய வஞ்சக எண்ணம் தெரியாது. எனவே, சின்னானைப் பார்த்து, "அப்படியானால் என்ன செய்யலாம்? நீயே சொல்" என்றான். சின்னான், "இந்த நாணயங்களில் ஆளுக்கு நூறு எடுத்துக்கொள்வோம். எஞ்சிய நாணயங்களை ஒரு பானையில் வைத்து ஒருவரும் அறியாமல் புதைத்துவிடுவோம். கையிலுள்ள நாணயம் தீர்ந்தவுடன் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொள்வோம்," எனக் கூறினான். அதன்படியே இருவரும் ஆளுக்கு நூறு நாணயங்களை எடுத்துக்கொண்டனர். எஞ்சிய எண்ணூறு நாணயங்களை ஒரு பானையில் போட்டு ஒரு பெரிய மரத்தடியில் புதைத்துவைத்தனர்.

சின்னான் ஆடம்பரமாகச் செலவு செய்தான். நல்லான் வழக்கம்போலச் சிக்கனமாகவே இருந்தான். தவறான வழிகளில் சின்னான் செலவு செய்ததால் அவனிடமிருந்த நாணயங்கள் விரைவில் தீர்ந்து போயின. நல்லவனைப்போல் நடித்த சின்னான் நல்லானிடம் போய், "எனக்கு அவசரமாகப் பொருள் தேவை. வா, இருவரும் போய்ப் புதைத்துவைத்த நாணயத்தில் மேலும் கொஞ்சம் எடுத்து வருவோம்," எனக் கூறினான். அவன் கூறியதை நம்பி நல்லான் சென்றான். இருவரும் ஆளுக்கு ஐம்பது தங்க

நாணயங்கள் எடுத்துக்கொண்டு மீதியைப் புதைத்து விட்டு வந்தனர். சில நாள்கள் கழிந்தன. சின்னான் மீதியிருந்த நாணயங்கள் எல்லாவற்றையும் தானே எடுத்துக்கொள்ளவேண்டும் என ஆசைப்பட்டான். "நல்லான் என்னை முழுவதும் நம்பிவிட்டான். இப்போது அந்த நாணயங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டால் என்மீது சந்தேகம் கொள்ளமாட்டான்," என எண்ணினான். ஒரு நாள் இரவு ஒருவரும் அறியாமல் சென்று நாணயங்களை எடுத்துக் கொண்டான்; வெறும் பானையை அங்கேயே புதைத்து வைத்துவிட்டான்.

மேலும் சில நாள்கள் கழிந்தன. நல்லானின் உறவினர் ஒருவர் திருமணத்திற்குப் பணம் இல்லாமல் வருந்தினார். அவருக்கு உதவ நல்லான் எண்ணினான். உடனே சின்னானிடம் சென்று, "எனக்குப் பணம் தேவை. நாம் சென்று எஞ்சிய நாணயங்களை எடுத்து வருவோம்" என்றான். சின்னான்,"சரி வா. எனக்கும் பணம் தேவை. நானே உன்னைக் கேட்க எண்ணியிருந்தேன்" எனக் கூறினான். இருவரும் சென்று பானையைத் தோண்டி எடுத்தனர். பானை காலியாக இருந்தது. உடனே சின்னான், "அட பாவி! எனக்குத் தெரியாமல் நீ வந்து எடுத்துவிட்டாயே. உன்னை நம்பி மோசம் போய்விட்டேனே. உன்னை நான் விடப்போவதில்லை. வா நீதிமன்றத்துக்கு," எனக் கூக்குரலிட்டான். நல்லான், "எப்படிப் பணம் போயிற்று?" என அறியாமல் திகைத்தான். வழக்கு நீதி மன்றத்துக்கு வந்தது.

வழக்கினை விசாரித்த நீதிபதிகள், "இந்த வழக்கில் சாட்சியங்கள் இருந்தால்தான் தீர்ப்பு வழங்க முடியும். நல்லான் திருடினான் என்பதற்கு என்ன சாட்சி" எனச் சின்னானிடம் கேட்டனர். வஞ்சகனான சின்னான் உடனே, "ஐயா! நாங்கள் பணத்தைப்

புதைத்து வைத்த மரத்தில் ஒரு பேய் இருக்கிறது. அதுதான் நல்லான் திருடியதாக என்னிடம் கூறியது. நீதிபதிகள் அங்கு வந்தால் அப் பேய் கூறுவதை உங்கள் காதால் கேட்கலாம். நாளை இரவு நீங்கள் வந்தால் நான் சாட்சியினைக் காட்டுகிறேன்,'' என்றான். நீதிபதிகளும் உடன்பட்டனர்.

அன்றிரவு சின்னான் தன் தந்தையிடம் பின்வருமாறு கூறினான். ''அப்பா! நான் தண்டனையிலிருந்து தப்புவதற்கு நீங்கள்தான் உதவவேண்டும். நாளை இரவு நீங்கள் அந்த மரத்தடிக்கு என்னுடன் வரவேண்டும். அந்த மரத்துப் பொந்தில் உங்களை ஒருவரும் அறியாமல் ஒளித்துவைத்துவிடுவேன். நீதிபதிகள் அங்கு வருவார்கள். அப்போது நான் 'பேய் சாட்சி கூறும்' எனச் சொல்வேன். நீங்கள் உள்ளிருந்தபடியே 'நல்லான்தான் பணத்தைத் திருடினான். அதனை நான் பார்த்தேன்' எனக் கூறவேண்டும். நீதிபதிகள் பேய் சாட்சி கூறுவதாக நம்பி எனக்கு விடுதலை தருவார்கள். நல்லான் தண்டனை அடைவான். எல்லாப் பணத்தையும் நாமே வைத்துக் கொள்ளலாம்'' எனக் கூறினான். அவனுடைய தந்தை மகனைத் திருத்தவில்லை. மகனுடைய தீய செயலுக்கு அவரும் சம்மதித்தார். அன்றிரவு அவரைச் சின்னான் ஒருவரும் அறியாமல் மரப் பொந்தில் ஒளித்து வைத்தான்.

குறிப்பிட்ட நேரத்தில் அனைவரும் அந்த இடத்துக்கு வந்தனர். நீதிபதிகள், ''பேயே! நல்லான் பணத்தைத் திருடியது உண்மையா?'' எனக் கேட்டனர். ''ஆம். நல்லான்தான் பணத்தைத் திருடினான்'' எனப் பதில் வந்தது. நல்லான் திருடவில்லை என்பதற்குச் சாட்சி இல்லை. எனவே, நீதிபதிகள் நல்லானை குற்றவாளி என முடிவு செய்தனர். நல்லானுக்கு ஒன்றும் புரியவில்லை. மரத்திலிருந்து பேசுவது பேய்ன்று எனத் தெரிந்துகொண்டான். ஆனாலும்



தான் சொல்லுவதை எவரும் நம்பமாட்டார்கள் என எண்ணினான். உடனே நீதிபதிகளைப் பார்த்து, "ஐயா! என்னை மன்னியுங்கள். நான்தான் பணத்தை எடுத்தேன். அப்போது யாரோ வருவதுபோல் இருந்தது. உடனே பண மூட்டையை இந்த மரப் பொந்தில் போட்டுவிட்டேன். சிறிது நேரம் கழித்து எடுக்க முயன்றேன். ஆனால், அப்பொந்தில் ஒரு பெரிய பாம்பு இருந்தது. அது கடிக்க வந்தது. நான் பயந்து வந்துவிட்டேன். அந்தப் பணமூட்டை பொந்தில்தான் உள்ளது. பாம்பு இருப்பதால் எடுக்கமுடியாது. எனவே, இந்த மரத்தினை நெருப்பிட்டு எரித்தால் பாம்பு வெளியாகிவிடும். பணத்தை எடுக்கலாம்'' என்று கூறினான். நீதிபதிகள் மரத்தை எரிக்க உத்தரவிட்டனர்.

சின்னான் பயந்து நடுங்கினான். ஆனாலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. உடனே மரத்துக்கு நெருப்பு வைக்கப்பட்டது. உள்ளிருந்த சின்னானின் தந்தை அலறினார். அனைவரும் திடுக்கிட்டனர். அவர் நெருப்புக் காயங்களுடன் வெளியே ஓடிவந்தார். உடனே நீதிபதிகள் அவர்தாம் உள்ளேயிருந்து சாட்சி சொல்லியவர் எனத் தெரிந்து கொண்டனர். சின்னானின் சூழ்ச்சி வெளிப்பட்டது. அவனது தந்தை நெருப்புக் காயங்களால் இறந்துபோனார். சின்னா னுக்கும் கடும் தண்டனை கிடைத்தது. பேராசையால் தகாத வழியில் பணம் தேடியதால் சின்னான் தந்தையை இழந்தான்; சிறைத் தண்டனையும் பெற்றான். நல்லான் மிகவும் நல்லவனாக இருந்தாலும் தீயவனாகிய சின்னா னுடன் சேர்ந்ததால் துன்பம் அடைந்தான்.

"கெடுப்பது ஒழி." —ஆத்திசூடி

"ஓரஞ் சொல்லேல்." —ஆத்திசூடி

"அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்."

—உலகநீதி

# 6. அண்டங் காக்கை

"சோழ வளநாடு சோறுடைத்து" எனக் கேட்டிருக்கிறோம். சோழ நாடு நீர்வளமும் நிலவளமும் உடையது. அவற்றுடன் கல்வியால் பெருமைபெற்ற அறிஞர்களையும் உடையது. அச்சோழ நாட்டில் சில நூற்றாண்டுகளுக்குமுன் புலவர் ஒருவர் தோன்றினார். அவரது பெயர் 'நிரம்ப அழகியர்' என்பதாகும். அவர் சிறந்த கல்வி அறிவு உடையவர்; பாடல் இயற்றும் திறம் படைத்தவர்; அழகற்ற தோற்றம் உடையவர்; மிகவும் குள்ளமானவர்; மிகுந்த கருமை நிறம் பொருந்தியவர்.

நிரம்ப அழகியர், ஒருமுறை பாண்டிய நாட்டுக்குச் சென்றார். அந்நாட்டில் ஆண்டு வந்த சிற்றரசன் ஒருவனுடைய அவைக்குச் சென்றார். அரசன் அவரது குள்ளமான உருவத்தைப் பார்த்தான், கருமையான அவர் நிறத்தைக் கண்டான். அழகற்ற அவரது தோற்றத்தைக் கண்ட மன்னன் இகழ்ச்சியாகச் சிரித்தான். அவரை யார் என்று அரசன் அறிந்து கொள்ளவில்லை. அவையினரை நோக்கி, "இவர் அண்டங் காக்கைக்குப் பிறந்தவர் போன்றுள்ளார்" என இகழ்ந்து பேசினான். அதனைக் கேட்ட அவையினர் அனைவரும் 'கொல்' எனச் சிரித்தனர். மன்னன் தம்மை இகழ்ந்து உரைத்தமை குறித்துப் புலவர் மனம் வருந்தினார். அரசனுக்கு நல்லறிவு புகட்ட விரும்பினார்.

நிரம்ப அழகியர், அரசனைப் பார்த்து, "மன்னரே! அண்டங் காக்கைக்குப் பிறந்தவர் நீங்களே அன்றி நான் அல்லேன்" எனக் கூறினார். அரசனும் அவையினரும்



இதனைக் கேட்டனர். மன்னன் மனம் புழுங்கினான். அவையினர் மன்னனை ஏளனமாகப் பார்த்து மனத்திற்குள் உவகை பூத்தனர். தன்னுடைய அவையில் புகுந்து தன்னையே இகழ்ந்து பேசியதைக் கேட்டு மன்னன் பெரிதும் வருந்தினான். அவையினர் தன்னைப் பார்த்துச் சிரிக்கும்படியாகப் பேசியது குறித்து மிகுந்த கோபம் கொண்டான். நிரம்ப அழகியரைப் பார்த்து, "எம் அவையில் புகுந்து இந் நாட்டு மன்னன் என அறிந்திருந்தும் எம்மை நீர் இகழ்ந்து பேசினீர். அரசனை இகழ்ந்த குற்றத்திற்கு என்ன தண்டனை தெரியுமா?" எனக் கேட்டான்.

உடனே புலவர் "அரசே! 'ஆறுவது சினம்.' ஏன் வீணாகக் கோபப்படுகிறீர்? நான் உங்களை இகழ்ந்து கூறியதாக நீங்கள் தவறாக எண்ணிவிட்டீர்கள். நான் உங்களை மனமாரப் புகழ்ந்துதான் கூறியுள்ளேன்' என்றார். இதனைக் கேட்டதும் அரசனுக்கு மேலும் சினம் பொங்கிற்று. புலவர் தன்னை இகழ்ந்தது மட்டும் அல்லாமல் புகழ்ந்து உரைத்ததாக வேறு சொல்கிறாரே என எண்ணினான். "என்ன ஆணவம் உங்களுக்கு? எம் அவையில் எம்மையே இகழ்ந்து பேசிவிட்டு மேலும் புகழ்ந்து உரைத்ததாகக் கூறுகிறீர்கள்" எனக் கோபமாகச் சொன்னான். அவையில் இருந்தவர்கள் என்ன நிகழுமோ என அஞ்சினர். அரசன் மரணதண்டனை விதிப்பானோ என எண்ணிக் கலங்கினர்.

நிரம்ப அழகியர் கொஞ்சமும் அஞ்சாமல் நெஞ்சத் துணிவுடன் இருந்தார். அரசனைப் பார்த்து, "மன்னா! நான் கூறியதில் பிழை இல்லை. 'அண்டம்' என்றால் 'உலகம்'. 'காக்கை' என்றால் 'காத்தல்'. 'அண்டங் காக்கைக்குப் பிறந்தவர்' என்றால் 'உலகத்தைக் காப்பதற்காகப் பிறந்தவர்' என்பதே பொருள் ஆகும். நீங்கள் இந்த நாட்டைக் காக்கும் அரசர்தாமே. அதனால்தான் நான் உங்களை அவ்வாறு கூறினேன். இப்பொழுது

சொல்லுங்கள் உலகைக் காக்கப் பிறந்தது நானா? நீங்களா?'' என்றார்.

புலவர் உரைத்ததைக் கேட்ட மன்னன் தன் அறியாமையை எண்ணித் தலைகுனிந்தான். உருவத்தைப் பார்த்து இகழ்ந்தமைக்காக மனம் வருந்தினான். அவையினர் புலவரின் அறிவாற்றலைக் கண்டு மகிழ்ந்தனர். அரசன் புலவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். நிரம்ப அழகியருக்குப் பொன்னும் பொருளும் பரிசாக அளித்தான்.

''உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.''

—திருக்குறள்

# 7. தங்கக் கிண்ணம்

கன்னன், துரியோதனன் நண்பன். துரியோதனனுக்காகத் தன்னுயிரையே கொடுத்த உத்தமன்; நட்பிற்கு இலக்கணமாக வாழ்ந்தவன்; இல்லை எனத் தன்னிடம் வந்தவர்கட்கெல்லாம் 'இல்லை' எனச் சொல்லாது கொடுத்த பெருவள்ளல்; நன்றிக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவன். பாண்டவர் தன் தம்பியர் எனத் தெரிந்த பின்னரும நன்றிமறவாத நல்லியல்பினால் பாண்டவர் பக்கம் செல்லாதவன்.

இத்தகைய பெருமை வாய்ந்த கன்னன் அங்க நாட்டின் அரசனாக விளங்கியவன். அவன் பிறக்கும் போதே கவசத்துடனும் காதில் குண்டலத்துடனும் பிறந்தான். அவையிரண்டும் அவன் உயிரைக் காக்க இறைவனால் அளிக்கப்பட்டவை. அவற்றையே இந்திரனுக்குக் கொடுத்துவிட்டான். கொடுப்பதையே தன் கடமையாகக் கொண்டு வாழ்ந்தவன் கன்னன்.

அந்த வள்ளலிடம் ஒரு நாள் ஏழை ஒருவன் உதவி நாடி வந்தான். அப்போது கன்னன் எண்ணெய் தேய்த்துக்கொண்டிருந்தான். உதவி நாடிச் சென்ற ஏழை, கன்னனைப் பார்க்க வந்திருப்பதைக் காவலரிடம் கூறினான். உதவி நாடி வருபவர் எவராயினும் அவரைத் தடுக்காமல் தன்னிடம் அனுப்ப வேண்டும் எனக் கன்னன் கூறியிருந்தான். எனவே, காவலர் அந்த இரவலனை நேரே கன்னனிடம் அழைத்துச் சென்றனர். கன்னன், "ஐயா! நீங்கள் என்னைத் தேடி வந்த காரணம் என்ன? உங்களுக்கு என்னால் இயன்றதைச் செய்வேன். உங்களின் தேவை என்ன?" எனக் கேட்டான்.

வந்தவன், ''வள்ளலே! நான் ஓர் ஏழை. என் மகளுக்குத் திருமணம் நடைபெறவேண்டும். என் வறுமையினால், எவரும் என் மகளை மணந்து கொள்ள இசையவில்லை. உங்களிடம் பொருளுதவி பெற்று என் மகள் திருமணத்தை நடத்த விரும்பியே உங்களிடம் வந்தேன். என் மகளுக்கு வாழ்வுதரத் தேவையான பொருளைக் கொடுத்துதவ வேண்டுகிறேன்'' எனப் பணிவுடன் வேண்டினான்.

அவன் கூறியதைக் கேட்ட கன்னன் மனம் இரங்கி னான். உடனே அந்த ஏழைக்குதவ முடிவு செய்தான். ''ஐயா! கவலையை விடுங்கள். உங்கள் மகள் நல்வாழ்வு பெறத் தேவையான பொருளைத் தருகிறேன். மகிழ்ச்சி யாகத் திரும்பிச் சென்று மகளின் திருமணத்தை நிறை வேற்றுங்கள்'' எனக் கூறினான். உடனே முன்னே இருந்த தங்கக் கிண்ணம் அவன் கண்ணில் பட்டது. எண்ணெய் இருந்த தங்கக் கிண்ணமே அது. தன் இடக்கை அருகே இருந்த அக் கிண்ணத்தை இடக் கையால் எடுத்து வறிஞனிடம் கொடுத்தான். ''ஐயா! இந்தத் தங்கக் கிண்ணம் விலை மதிப்புடையது. இதனை விற்றால் உங்கள் மகள் திருமணத்திற்குத் தேவையான பொருள் கிடைக்கும். பெற்றுச் செல்லுங்கள்'' எனக் கூறினான்.

வறியவன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டு ''வள்ளலே! நீங்கள் எண்ணெய் வைத்துக்கொள்ளப் பயன்படும் கிண்ணத்தை ஏன் கொடுக்கிறீர்கள்? உங்கள் அரண்மனையில் வேறு பொருள் இல்லையா? அலு வலரை அழைத்துப் பொன்னாகவே எனக்குக் கொடுக்கு மாறு சொல்லியிருக்கலாமே? எப்பொருளையும் வலக் கையால் கொடுப்பதுதானே சிறந்தது? அப்படியிருக்க நீங்கள் இடக்கையால் கொடுக்கக் காரணமென்ன?'' எனக் கேட்டான்.



கன்னன் வறியவனைப் புன்னகையுடன் நோக்கினான். ''ஐயா! என் அரண்மனையில் நிறையப் பொருள் உண்டு. அலுவலரை அழைத்துப் பொருள் கொடுக்கச் சொல்வதற்குள் என் மனம் மாறிவிட்டால், என்ன செய்வது? எனவேதான், உங்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் வந்தவுடனேயே அதனை நிறைவேற்ற முடிவு செய்தேன். எனக்கு முன்னே இருந்த தங்கக் கிண்ணத்தை உங்களுக்குக் கொடுத்தேன். அக் கிண்ணம் என் இடக்கை அருகில் இருந்தது. அதனை வலக்கையால் எடுத்துக் கொடுக்கலாமே என்று எண்ணினால், அதற்குள் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் மாறிப் போகலாம். கிண்ணத்தை ஏன் கொடுக்கவேண்டும்? பணம் கொடுத்துவிடலாமே என்ற எண்ணம் வரலாம். காலம் நீட்டித்துக் கொடுக்கலாம் எனவும் தோன்றலாம். மனம் மாறுவதற்குள் கொடுத்துவிடவேண்டும் என்பதற்காகவே இடக்கை அருகில் இருந்த கிண்ணத்தை இடக்கையாலேயே கொடுத்துவிட்டேன். நீங்கள் தவறாக நினைக்கவேண்டா'' எனக் கூறினான்.

கன்னனின் கொடைச் சிறப்புப்பற்றிக் காதால் கேட்டிருந்த அந்த வறியவன் நேரில் கண்டதும் பெருமகிழ்ச்சியடைந்தான். கன்னனைப் பாராட்டி வணங்கி மனநிறைவுடன் சென்றான்.

நன்றே செய்க. அதுவும் இன்றே செய்க.

—ஔவையார்

''வாளிரவி சுதன்வலக்கை யாலெடுத்துக் கொடுக்கு முன்னே
மனம்வே றாமென்(று)
ஏழுமறை யோர்க்கிடக்கை யாலெண்ணெய்க் கிண்ணம்எடுத்து
ஈந்தான் அன்றே.''

—செயங்கொண்டார் வழக்கம்

# 8. பழையது சாப்பிட்டேன்

கந்தன்குடி என்பது ஓர் ஊர். அவ்வூர் நன்செய் நிலங்கள் நிறைந்தது; நீர்வளம் உடையது. எனவே, அவ்வூர் மக்கள் வளமாக வாழ்ந்தார்கள். அவர்கள் உழவுத் தொழில்மூலமும் வாணிகத்தின்மூலமும் பொருள் சம்பாதித்துவந்தனர். சிலர் பெரும் செல்வர்களாகவும் இருந்தார்கள். அவர்களுள் செல்வநாதர் என்ற ஒருவர் இருந்தார். அவரது முன்னோர்கள் பெருஞ்செல்வம் சேர்த்துவைத்திருந்தார்கள். செல்வநாதரின் தந்தையார் சிறந்த உழைப்பாளி. தம் முன்னோர் தேடிவைத்த செல்வத்தை நம்பியிராமல் தாமே உழைத்தார். அதனால் அவரது செல்வம் மேலும் பெருகிற்று. அவர் இறக்கும் தறுவாயில் செல்வநாதரை அழைத்து, ''நம் குடும்பம் பரம்பரை பரம்பரையாகச் செல்வக் குடும்பம் அன்று; என் பாட்டனார் வறுமையில் வாழ்ந்தவர்;அயல் நாடுகளுக்குச் சென்று உடல் வருந்தி உழைத்தார்; தம் உழைப்பினால் பெருஞ்செல்வம் சேர்த்தார்; அச் செல் வத்தை வீண் வழியில் செலவிடாமல் சிக்கனமாக வாழ்ந்தார்; பிறகு ஊர் திரும்பிவந்தார்.

''உழுது பயிர் செய்வதற்கு ஏற்ற நன்செய் நிலங்களை அவர் வாங்கினார்; தாமே உழுது பயிர் செய்தார். அதன் பிறகு என்னுடைய தந்தையும் இரவு பகலாகப் பாடுபட்டு விளை நிலங்களைப் பெருக்கினார். இடைவிடாத உழைப்பினால் மேலும்மேலும் செல்வம் பெருகியது. நான் குடும்பத் தலைவன் ஆன பிறகு முன்னோர் வழியைப் பின்பற்றி நானும் உழைத்தேன். அதனால், நம் குடும்பநிலை மேலும் உயர்ந்தது. இப்போது நான் நம் குடும்பப் பொறுப்பை உன் கையில்

ஒப்படைக்கிறேன். இதன் பெருமை குன்றாமல் காக்க வேண்டியது உன்னுடைய கடமையாகும்'' எனக் கூறினார்.

தந்தையார் காலமானதும் செல்வநாதர் குடும்பப் பொறுப்பை ஏற்றார். அவரது உறவினர் அவர் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தனர். அமுதவல்லி என்ற அழகிய பெண்ணை மணம்பேசி முடித்தனர். அமுதவல்லி அருங்குணங்கள் பலவும் உடையவர். சிறந்த உழைப்பாளி. வீட்டுவேலைகள் அனைத்தையும் தாமே செய்து வந்தார். ஆடு மாடுகள் அனைத்திற்கும் தாமே தீனிபோட்டுக் கவனித்துக்கொண்டார். அமுதவல்லி வந்தபிறகு வீடு மேலும் சிறப்படைந்தது. தமது கணவருக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அன்போடு செய்துவந்தார். செல்வநாதர் தம் மனைவியின்மீது பேரன்பு கொண்டிருந்தார்.

செல்வநாதர் இளமைமுதல் செல்வமாகவே வளர்ந்தவர். வியர்வை சிந்த உழைத்து அறியாதவர். குடும்பப்பொறுப்பு ஏற்றபிறகும் அவர் உழைக்கவில்லை. தமக்கு மிகுந்த செல்வம் இருப்பதால் தாம் உழைக்கத் தேவையில்லை எனக் கருதினார். அதற்கேற்ப அவருக்கு நண்பர் சிலரும் சேர்ந்தனர். அவர்கள் செல்வநாதரின் செல்வத்தைத் தவறான வழிகளில் செலவழிக்கத் தூண்டினர். செல்வநாதர் அவர்களோடு சேர்ந்து வீண் பொழுது போக்கிவந்தார். தம்முடைய நிலங்களுக்குச் சென்று கண்காணிக்கவில்லை; வேலைக்காரர்களையே நம்பி நிலங்களை அவர்களிடம் விட்டுவிட்டார். செல்வநாதர் நிலங்களைப் பார்வையிட வரமாட்டார் எனத் தெரிந்ததும் வேலைக்காரர்கள் சரிவர வேலை செய்யவில்லை. எனவே, நிலங்கள் சரிவர விளையவில்லை. குடும்பத்தின் வருவாய் படிப்படியாகக் குறைந்தது. ஆனால், செலவுமட்டும் மிகுந்தது. கடைசியாகச் செல்வநாதர் தம் முன்னோர் தேடிவைத்த நிலங்களை விற்கத் தொடங்கினார்.

தம்முடைய கணவர் உழைக்காமல் வீண் செலவு செய்துவருவதைக் கண்ட அமுதவல்லி மிகவும் வருந்தினார். தம் கணவர் சோம்பேறியாக இருப்பதை அவர் விரும்பவில்லை. பலமுறை தம் கணவரிடம் எடுத்துரைத்தார். ஒரு நாள் அமுதவல்லி தம் கணவரைப் பார்த்து, 'குந்தித் தின்றால் குன்றும் மாளும்' என்பது உங்களுக்குத் தெரியுமன்றோ? உழைக்காமல் உள்ளதைச் செலவழித்துவந்தால் விரைவில் நம் குடும்பம் வறுமை அடையும். மீண்டும் இழந்த செல்வத்தை உங்களால் சேர்க்க முடியாது. வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்யவேண்டும். நம்மிடம் செல்வம் உள்ளவரை நண்பர்கள் சூழ்ந்திருப்பார்கள். செல்வம் குறைந்ததும் அனைவரும் சென்றுவிடுவர். சுற்றத்தார் பழிப்பர்'' என்று எடுத்துக் கூறினார். அதற்குச் செல்வநாதன், ''என் முன்னோர் நிறையச் செல்வம் சேர்த்துவைத்துள்ளனர். நான் என் ஏழையைப் போல் உழைக்கவேண்டும்? உணவுக்கு வழியில்லாதவர்கள்தாம் உழைக்கவேண்டும். உனக்கு ஒன்றும் தெரியாது. நீ பேசாமல் இரு'' எனக் கூறி அடக்கி விட்டார். அமுதவல்லி கணவரின் போக்கைக் கண்டு மனம் வருந்தினார். செல்வநாதர், ''அமுதவல்லி உழைப்பதால்தானே வருந்துகிறாள். அவளுக்கு மகிழ்ச்சிதரும் வகையில் ஏதாவது செய்யவேண்டும்'' என எண்ணினார். உடனே வீட்டு வேலைகளைச் செய்ய ஒரு பெண்ணை ஏற்பாடு செய்தார். சமையல் செய்ய ஒரு சமையல்காரனையும் அமர்த்தினார். அமுதவல்லி எவ்வளவோ தடுத்தும் அவர் கேட்கவில்லை. சமையற்காரன் வந்த பிறகு வீட்டுச்செலவும் மிகுந்தது எனவே, செல்வநாதர் மேலும் நிலங்களை விற்றார். ஆயினும் அவருக்கு உழைத்து உண்ணவேண்டும் என்ற எண்ணம் வரவில்லை.

அமுதவல்லி தம் கணவரை எப்படியாவது திருத்த வேண்டும் என எண்ணினார். அதற்குரிய சமயத்தை



எதிர்பார்த்திருந்தார். பொங்கல் திருநாள் வந்தது. செல்வநாதர் வீட்டில் சிறப்பாகப் பலவகை உணவுகள் சமைக்கப்பட்டிருந்தன. செல்வநாதர் வயிறு நிரம்ப உண்டு படுத்து உறங்கினார். கண்விழித்து எழுந்த போது அமுதவல்லி சோர்வாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார். அவர் அமுதவல்லியைப் பார்த்து, ''சாப்பிட்டுவிட்டாயா? ஏன் சோர்வாக இருக்கிறாய்?'' எனக் கேட்டார். அதற்கு அமுதவல்லி, ''சிறிது பழையது சாப்பிட்டேன்'' எனக் கூறினார். செல்வநாதருக்கு கோபம் வந்துவிட்டது. உடனே சமையற்காரனை அழைத்து ''வீட்டுத் தலைவிக்கு ஏன் பழையது போட்டாய்? சமைத்த உணவு வகையெல்லாம் எங்கே?'' எனக் கேட்டார். சமையற்காரன், ''ஐயா! அம்மா புதிய சாப்பாடுதான் சாப்பிட்டார்கள். இன்று சமைத்த எல்லா உணவு வகைகளையும் வைத்தேன்'' எனக் கூறினான்.

செல்வநாதர் மனைவியைப் பார்த்து, ''இன்று சமைத்த உணவு வகைகளைச் சாப்பிட்டுவிட்டுப் பின் ஏன் பொய் சொல்லுகிறாய்?'' எனக் கேட்டார். அதற்கு அமுதவல்லி, ''பொங்கல் திருநாள் உழைக்கும் மக்கள் விழா. உழைத்து அதனால் வரும் பொருள்களைக் கொண்டு சமைத்து உண்ணும் விழா. நீங்கள் உழைத்துச் சம்பாதித்த பொருள்களைக்கொண்டு இந்த உணவு சமைக்கவில்லை. உங்கள் முன்னோர் உழைப்பினால் வந்த உணவையே இன்று உண்டேன். எனவே தான் 'பழையது சாப்பிட்டேன் எனக் கூறினேன்.' இதில் பொய் ஒன்றுமில்லை'' எனக் கூறினார்.

இதனைக் கேட்ட செல்வநாதன் ஒன்றும் கூறவில்லை. மனைவி கூறியதை எண்ணிப் பார்த்தார். மனைவி கூறியது சரியே என முடிவு செய்தார். தாம் இதுவரை சோம்பேறியாக இருந்துவந்ததை எண்ணி வெட்கமடைந்தார். தாம் உழைக்காமையால் தமது செல்வம் குறைந்ததை எண்ணிப் பார்த்தார். தம் மனைவி

பலமுறை எடுத்துக் கூறியும் கேட்காமல் போனதை எண்ணி வருந்தினார். இனிமேலாவது உழைக்க வேண்டும் என முடிவெடுத்தார்.

அன்றுமுதல் நாள்தோறும் தம் வயலுக்குச் செல்வநாதர் சென்றார். தம் ஆள்களோடு தாமும் உழைத்தார். தினமும் தமது நிலங்களைப் பார்வையிடச் செல்வதில் தவறுவதில்லை. செல்வநாதர் உறுதியாக வருவார் என அறிந்ததால் அவரது வேலையாள்களும் தவறாமல் வந்து நன்றாகப் பாடுபட்டு உழைத்தனர். நிலமும் அந்த ஆண்டு நன்றாக விளைந்தது. செல்வநாதர் உழைப்பின் பெருமையை உணர்ந்துகொண்டார். உழைப்பின் உயர்வினைத் தமக்கு எடுத்து உணர்த்திய மனைவியின்மீது அவருக்கு அன்பு மிகுந்தது. உழைப்பதால் தமது உடலும் நலமாக இருப்பதை உணர்ந்தார். உழைப்பின் பயனாகத் தமது செல்வம் பெருகியதைக் கண்டு மகிழ்ந்தார். 'உழைப்பே உயர்வு தரும்' என்னும் உண்மையை உணர்ந்தார்.

'சோம்பித் திரியேல்.'

—ஆத்திசூடி

'போனகம் என்பது தான் உழந்து உண்டல்.'

—கொன்றைவேந்தன்

'உழைக்காதவனுக்கு உண்ண உரிமையில்லை.'

—காந்தியடிகள்

# 9. தலைமைச் சேவகன்

பிரெடிரிக் என்பவர் பர்சியா நாட்டை ஆண்ட மன்னர். மக்கள் நலமே தம் நலம் எனக் கருதி நேர்மையாக நாட்டை ஆண்டுவந்தார். எளியவரிடமும் இரக்கம்காட்டி அருள் செய்யும் அருளாளர். அவரிடம் பலர் பணிபுரிந்துவந்தனர். அவர்கள் அனைவரும் தம் மன்னரைத் தெய்வமாகவே கருதி மிக்க அன்புடன் பணி புரிந்துவந்தனர். மன்னரும் தம் பணியாளருடைய குறைகளை அவ்வப்போது அறிந்து தீர்த்துவந்தார்.

ஒரு நாள் மன்னர் தம் அறையில் அமர்ந்திருந்தார். மன்னர் தமக்கு ஏதேனும் தேவையாயின் வெளியில் உள்ள பணியாளரை அழைத்து ஆணையிடுவது வழக்கம். அரசர் அழைத்தாலொழிய அப் பணியாளன் உள்ளே செல்லக்கூடாது. பணியாளனை அழைக்க மன்னர் தம் அருகில் ஒரு மணியை வைத்திருந்தார். அம் மணியை அடித்தவுடன் வெளியில் உள்ள பணியாளன் உள்ளே சென்று மன்னரது ஆணையைக் கேட்டு நிறைவேற்றுவது வழக்கம்.

பணியாளனை அழைக்க மன்னர் மணி அடித்தார். வெளியிலிருந்து எவரும் வரவில்லை. மீண்டும் மணி அடித்தார். அப்போதும் பணியாளன் வரவில்லை. அரசருக்கு வியப்பாயிருந்தது. அவரது அறைக்கு வெளியே இருக்கும் பணியாளன் நற்பண்புகள் மிக்கவன். மன்னரது கருத்தறிந்து அவர் சொல்லாமலே அவரது தேவைகளை நிறைவேற்றுவான். எனவே, மன்னர் அப் பணியாளனிடம் மிகுந்த அன்புடையவராயிருந்தார். அவர் அரண்மனையில் இருந்த வேறு சில பணியாளர்கள்

இதனால் அந்தப் பணியாளன்மீது பொறாமையுடைய வராயிருந்தனர். அவன்மீது ஏதேனும் குற்றம் கண்டு மன்னருக்கு அவன்மீது வெறுப்பு ஏற்படச்செய்ய வேண்டுமென்று காத்திருந்தனர்.

மன்னர் பலமுறை அழைத்தும் அப் பணியாளன் வாராதிருக்கவே அவர் தாமே வெளியே வந்தார். அப்போது பொறாமைகொண்ட பணியாளன் ஒருவன், "அரசே! நீங்கள் பலமுறை அழைத்தும் அவன் மதியாமல் உறங்கிக்கொண்டிருக்கிறான். அவனுக்குப் பதில் நான் செய்கிறேன்" எனக் கூறினான். மன்னர் அவன் கூறியதைப் பொருட்படுத்தாமல் பணியாளன் உறங்குமிடத்திற்குச் சென்றார். பணியாளன் வாடிய முகத்தோடு படுத்துறங்குவதைக் கண்டார். அவன் அவ்வாறு இருக்கக்கூடியவன் அல்லன் என்பதை உணர்ந்ததால் அரசர் சினங்கொள்ளவில்லை. அருகில் சென்று அவனைப் பார்த்தார். அவனது சட்டைப் பையில் ஒரு கடிதம் இருந்தது. அது அவர் கண்ணில் பட்டது. மன்னர் அக் கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தார்.

அக் கடிதம் அப் பணியாளனின் தாயார் அவனுக்கு எழுதிய கடிதம். அதில், "மகனே! உனக்கு வருவாய் குறைவு என்பது எனக்குத் தெரியும். ஆயினும் உன் தேவைகளைக் குறைத்துக்கொண்டு எனக்குப் பணம் அனுப்பிக்கொண்டிருக்கிறாய். இரண்டு மாதங்களாக நான் நோய்வாய்ப்பட்டிருந்ததால் மருத்துவச் செலவுக்கென அதிகமாகப் பணம் அனுப்பியிருந்தாய். உன்னைப் பார்த்துவந்தவர்கள் நீ உன் உணவினை ஒரு வேளை குறைத்துக்கொண்டு அத் தொகையை எனக்கு அனுப்பியதாகக் கூறினார்கள். பெற்ற என் வயிறு அதனைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தது. உன் உணவினைக்கூட எனக்காக நீக்கிவிட்டாயே. உன் உடல்நலம் என்னவாகும்? பெற்ற தாயாகிய என்மீது



உனக்கிருக்கும் பேரன்பினை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். ஆனாலும் எனக்காக உன் உணவுச் செலவைக் குறைத்துக்கொள்வதை நான் விரும்பவில்லை. எனக்கு நோய்முற்றி இறந்தாலும் கவலையில்லை. நீ எனக்காகப் பட்டினி கிடந்து உன் உடலைக் கெடுத்துக்கொள்ளாதே'' என எழுதப்பட்டிருந்தது.

மன்னர் கடிதத்தை இருந்த இடத்தில் வைத்து விட்டுத் திரும்பிவிட்டார். உணவு உண்ணாத காரணத் தாலேயே அவன் சோர்ந்து படுத்திருப்பதை அறிந்து அவனை எழுப்பாமலேயே வந்துவிட்டார். பொறாமை யால் கோள் சொல்லிய பணியாளன் மனத்துள் மகிழ்ந் தான். மன்னர் அவனை உடனே வேலையைவிட்டு நீக்கித் தண்டிப்பார் என அவன் கருதினான்.

மன்னர் வந்துபோனதை அறியாமல் அப் பணி யாளன் உறங்கிக்கொண்டிருந்தான். பக்கத்திலிருந்த சிலர் அவனை எழுப்பி நடந்தவற்றைக் கூறினர். அவன் பதறி எழுந்தான். மன்னரிடம் ஓடிச்சென்று மன்னிப்புக்கேட்க விரும்பினான். விரைவாக எழுந்து செல்லும்போது அவனது சட்டைப் பையிலிருந்து நாணயத்தின் ஒலி கேட்டது. அவன் தன் பையினை நோக்கினான். அதனுள் தங்கக் காசுகள் கிடந்தன. அவனுக்கு மேலும் அச்சமேற்பட்டது. தன்மீது பொறாமைகொண்ட எவனோ தங்கக் காசுகளைத் தன் பையில் போட்டுள்ளான். தன்னைத் திருடன் என மன்னர் நினைக்குமாறு சூழ்ச்சி செய்துள்ளான் எனக் கருதினான். மன்னர் தன்னைத் தண்டிப்பது உறுதி என அஞ்சியபடியே ஓடினான்.

மன்னர் தனியே அமர்ந்திருந்தார். ஓடி வந்த பணியாளன் அவர் காலில் விழுந்து, ''அரசே! என்னை மன்னிக்க வேண்டும். நான் தவறு செய்துவிட்டேன்.

என்னையறியாமல் கண்ணுறங்கிவிட்டேன். என் பிழையினைப் பொறுத்து என்மீது அருள் காட்டுங்கள். நான் உறங்கும்போது எவரோ என் பையில் இத் தங்கக் காசுகளைப் போட்டுள்ளனர். இவை எனக்குரியன அல்ல'' எனக் கூறித் தங்க நாணயங்களை மன்னர்முன் வைத்தான். அவனது தூய உள்ளத்தையும் பிறர் பொருளை விரும்பாத நல்லியல்பையும் கண்ட மன்னர் மிக மகிழ்ச்சியடைந்தார்.

அச்சத்துடன் பணிந்து நின்ற பணியாளனை மன்னர் புன்முறுவலுடன் பார்த்தார். "நீ உன் தவற்றை உணர்ந்தாய். மேலும் நீ உன் தாய்மீது கொண்டுள்ள அன்பினை உன் பையிலுள்ள கடிதம்மூலம் தெரிந்துகொண்டேன். உன் பசியைக்கூடப் பொருட்படுத்தாமல் உன் தாயின் நோயைப் போக்கப் பணம் அனுப்பிய செயலை அறிந்து நான் மிக மகிழ்ந்தேன். உன்னைப் பெற்ற தாய் பெரும் பேறு பெற்றவள். உன்னைப் பெற மிகுந்த தவம் செய்திருக்கவேண்டும். மேலும், உன் நிலையறிந்து உனக்கு உதவத் தங்க நாணயங்களை நானே உன் பையில் போட்டேன். அதனை வைத்துக்கொள்ளவேண்டுமெனக் கருதாமல் பிறரது பொருள் எனக் கருதி என்னிடம் கொடுத்த உன் நேர்மையை நான் பாராட்டுகிறேன். அந்தக் காசுகளை உன் அன்னையிடம் நீ கொண்டுள்ள அன்பிற்கும் உன் நேர்மைக்கும் நான் தந்த பரிசாக வைத்துக்கொள். உன் தாயை இன்றே இங்கு அழைத்து வந்து அரண்மனை மருத்துவரைக்கொண்டு மருத்துவம் செய்கிறேன். இன்றுமுதல் நீ இந்த அரண்மனையில் தலைமைச் சேவகனாகப் பணிபுரிக'' எனக் கூறினார்.

*'தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை.'*

—கொன்றைவேந்தன்

*'ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை.'*

—திருக்குறள்

# 10. தருமர்

பாண்டவர்களைப்பற்றி நாம் அறிவோம். தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்பவரே அவர்கள். ஒரு நாள் பாண்டவர் ஐவரும் காட்டிற்குச் சென்றனர். அப்போது முனிவர் ஒருவர் அங்கு வந்தார் அவர் பாண்டவரைப் பார்த்து, "எனது தீக்கடைகோல் ஒரு மானின் கொம்பில் மாட்டிக்கொண்டது. அந்த மான் வேகமாக ஓடிவிட்டது. அந்தக் கடைகோல் எனக்குத் தேவை. நீங்கள் ஏப்படியாவது அம் மானைக் கண்டுபிடித்து என் பொருளை மீட்டுத் தரவேண்டும்" என வேண்டிக்கொண்டார். பிறருக்கு உதவுவதைத் தம் கடமையாகக் கொண்டவர் தருமர். உடனே அம் மானைத் தேடிப் புறப்பட்டார். அவரது தம்பியர் நால்வரும் அவருடன் சென்றனர். பாண்டவர் ஐவரும் பல விடங்களிலும் மானைத் தேடினர்; நீண்டதூரம் வந்து விட்டனர். காட்டில் நெடுந்தூரம் நடந்ததால் களைத்துப் போய்விட்டனர். அனைவருக்கும் தண்ணீர் வேட்கை எழுந்தது. ஓரிடத்தும் தண்ணீர் கிடைக்கவில்லை தருமர் நகுலனைப் பார்த்து, "எங்காவது போய்த் தண்ணீர் கொண்டு வா" எனக் கூறினார்.

நகுலன் தண்ணீரைத் தேடிச் சென்றான். சிறிது தூரத்தில் நாரைகள் பறப்பதைப் பார்த்தான். நாரைகள் இருக்குமிடத்தில் தண்ணீர் இருக்கும் என எண்ணினான் எனவே, அத் திசைநோக்கி நடந்தான். அவன் நினைத்தது சரியாகவே இருந்தது. எதிரே ஒரு குளம் தெரிந்தது. அந்தக் குளத்தில் இறங்கித் தண்ணீர் எடுக்கப் போனான். அப்போது, "நகுலா! இக் குளம் என் பாதுகாப்பில் இருக்கிறது. இதில் நீர் எடுக்கவேண்டு

மானால் என் அனுமதி வேண்டும். நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டு நீர் எடுக்க வேண்டும்'' என்று ஒரு குரல் கேட்டது. நகுலன் சுற்று முற்றும் பார்த்தான். நாரைகள்தாம் இருந்தன. வேறு யாரையும் காணவில்லை. ''சரி, யாரோ நம்மைப் பய முறுத்துகிறார்கள். நம்மிடம் வில் இருக்கிறது. நம்மை யாரும் எதுவும் செய்யமுடியாது'' எனப் பொருட் படுத்தாமல் குளத்தில் இறங்கி நீர் குடித்தான். உடனே அவன் மயக்கமடைந்து வீழ்ந்துவிட்டான் இறந்து போனவன்போலக் கிடந்தான்.

நகுலன் சென்று வெகுநேரம் ஆகிவிட்டது. தரு மருக்குக் கவலை ஏற்பட்டது. உடனே சகாதேவனைப் பார்த்து, ''நீ போய் நகுலனைப்பற்றித் தெரிந்து வா'' எனக் கூறி அனுப்பினார். சகாதேவன், நகுலனைத் தேடிச் சென்றான். நகுலன் சென்ற குளத்தை அடைந் தான். நகுலன் விழுந்து கிடந்ததைச் சகாதேவன் கவனிக்கவில்லை. நீர்வேட்கை மிகுதியால் குளத்தைப் பார்த்தவுடன் நீர் பருக இறங்கினான். நகுலன் கேட்டது போலவே சகாதேவனும் அக் குரலைக் கேட்டான். அவனும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் நீரில் இறங் கினான். நகுலனுக்கு ஏற்பட்ட கதி அவனுக்கும் ஏற் பட்டது. அவனும் இறந்தவன்போல வீழ்ந்துவிட்டான்.

சகாதேவனும் திரும்பாமல்போகவே தருமர் மிகுந்த வருத்தமடைந்தார். அருச்சுனனை அனுப் பினார். அருச்சுனனும் அந்தக் குரலைப் பொருட்படுத் தாமல் நீரில் இறங்கினான். இரு தம்பியருக்கும் ஏற் பட்ட நிலையே அவனுக்கும் ஏற்பட்டது. பெருவீரன் ஆகிய அருச்சுனனும் நீண்ட நேரம் ஆகியும் திரும்பா மையால் தருமர் மனம் கலங்கினார், தாமே சென்று பார்த்துவர எண்ணிப் புறப்பட்டார். இதற்குள் பீமன், ''நான் போய்ப் பார்த்து அவர்களை அழைத்து வருகிறேன். நீங்கள் கவலைப்படாமல் இங்கேயே இருங்கள்'' எனக் கூறிச் சென்றான்.

பீமன் அந்தக் குளக்கரைக்கு வந்தான். தன் தம்பியர் மூவரும் பிணம் போலக் கிடப்பதைக் கண்டான். "இவர்களுக்கு இந்தக் கதி எப்படி ஏற்பட்டது? யார் இப்படிச் செய்தவர்?" என நினைத்து நாலாபக்கமும் பார்த்தான். நாரைகளைத் தவிர வேறு எவரும் அவனுக்குத் தெரியவில்லை. தண்ணீரைக் கண்டதும் நீர்வேட்கை மிகுதியாயிற்று. நீரைப் பருகிவிட்டு மேற் கொண்டு முடிவு செய்யலாம் என எண்ணிக் குளத்தில் இறங்கினான். முன்போலவே அந்தக் குரல் அவனையும் தடுத்தது. மற்றவர்களைப்போலவே பீமனும் அதனைப் பொருட்படுத்தவில்லை வேட்கையைத் தணித்துக் கொள்ள நீர் பருகினான். உடனே அவனும் நிலத்தில் மரம்போலச் சாய்ந்துவிட்டான்.

நெடுநேரமாகியும் பீமன் திரும்பாததைக் கண்ட தருமர் பெரிதும் மனம் கலங்கினார். தம் தம்பிகளுக்குத் தீங்கு ஏற்பட்டுள்ளது என முடிவுசெய்தார். உடனே அவர் புறப்பட்டு அக் குளக்கரையை அடைந்தார். அங்குத் தம் தம்பியர் நால்வரும் மாண்டுகிடப்பதைக் கண்டு மனம் பதறினார். "எவ்வளவு பேர் எதிர்த்தாலும் எல்லோரையும் வெல்லும் திறன்மிக்க என் தம்பியர் இப்படிக் கிடக்கிறார்களே. இவர்களை யார் கொன் றிருப்பார்? இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது" என எண்ணினார். தருமர் ஒவ்வொருவரையும் பார்த்தார். எவ்விதக் காயமும் இல்லை. யாரும் போர் செய்து கொல்லவில்லை என அறிந்தார். இது துரியோதனனின் வஞ்சகச் செயலோ என எண்ணினார். தண்ணீரில் நஞ்சு கலந்திருப்பானோ? என ஐயம் கொண்டார். உடனே தண்ணீரில் இறங்கி ஒரு கை தண்ணீரை அள்ளி மோந்து பார்த்தார். உடனே ஒரு குரல், "தருமரே! உங்கள் தம்பியரை நான்தான் கொன்றேன். அவர்கள் என் சொல்லைப் பொருட்படுத்தாமல் எனக்குரிய குளத்தில் இறங்கினார்கள். அதனால் அவர்கள் மாண்டனர். நீங்கள் என் கேள்விகளுக்கு விடை தாராமல் தண்ணீ



குடிக்கக்கூடாது. மீறினால் இவர்கள் கதியே உங்களுக்கும் ஏற்படும்'' எனக் கூறியது.

''பேசுபவர் யார்?'' எனத் தருமர் உரக்கக்கேட்டார். ''நான் ஒரு தேவன். நாரை உருவில் இருக்கிறேன். என் பேச்சைக் கேளாமல் தண்ணீர் எடுத்ததால் இவர்களைக் கொன்றேன். நீங்களாவது என் கேள்விகளுக்குப் பதில் கூறுங்கள்'' என்ற குரல் கேட்டது. உடனே ஒளியுடன்கூடிய அழகிய உருவமுடைய ஒருவன் தருமரின் முன்னே தோன்றினான்.

தருமர் அவனைப் பணிவுடன் வணங்கினார். ''தேவா! எனக்குத் தெரிந்த வரையில் உங்கள் வினாக்களுக்கு விடையிறுப்பேன்'' எனக் கூறினார்.

தேவன் : தருமரே! உயிர் வாழ்ந்தும் வாழாதவனாக எண்ணப்படும் மனிதன் யார்?

தருமன் : தேவா! தான் செய்யவேண்டிய கடமைகளைச் சரியாகச் செய்யாத மனிதன் உயிரோடு இருப்பினும் அவன் இறந்தவனாகவே கருதப்படுவான்.

தேவன்: பூமியைவிடச் சிறந்தவர் யார்?

தருமர் : தாயே பூமியைவிடச் சிறந்தவர்.

தேவன்: செல்வங்களுள் சிறந்தது எது?

தருமர் : மிகச் சிறந்த செல்வம் கல்வியே.

தேவன்: உயிரைவிடச் சிறந்தது எது?

தருமர் : ஒழுக்கமே உயிரைவிட மேலானது.

தேவன்: செல்வன் யார்? ஏழை யார்?

தருமர் : போதுமென்ற மனம் உடையவனே செல்வன் ஆவான். மேலும் மேலும் வேண்டும் என்ற ஆசையுடையவன் ஏழை.

தேவன்: மனிதனுக்கு அடக்கமுடியாத பகைவன் யார்?
தருமர் : கோபம்தான் ஒரு மனிதனை அழிக்கும். அடக்க முடியாத விரோதி கோபம்தான்.

தேவன்: முடிவில்லாத நோய் எது?

தருமன்: பேராசை.

எல்லாவற்றிற்கும் தருமர் பணிவுடன் விடை சொல்லிக்கொண்டிருந்தார். அவர் கூறிய விடைகள் யாவும் அறிவுக்குப் பொருத்தமாயிருந்தன. தேவன் அவர் கூறிய விடைகளைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தான். தருமரது அறிவுக் கூர்மையைக் கண்டு வியந்தான். அவரது அடக்கம், அவனை மிகவும் கவர்ந்தது. எனவே, தருமருக்கு உதவி செய்ய விரும்பினான். ''தருமரே! உங்கள் அறிவாற்றலைக் கண்டு நான் மகிழ்கிறேன். மற்றவர்களைப் போல இல்லாமல் நீங்கள் என் சொல்லைக் கேட்டீர்கள். எவர் சொல்லாக இருந்தாலும் அதனை ஆராய்ந்து பார்த்து உண்மை தெரிந்து கொள்ளவேண்டும். இதனை மறந்த உங்கள் தம்பியர் என் சொல்லை மதியாமல் மாண்டனர். நீங்கள் குரல் வந்தவுடன் அதனைக் கேட்டீர்கள். யார் பேசுவது? எனக் கேட்டு உண்மை உணர்ந்தீர்கள். மேலும் என் கேள்விகள் அனைத்திற்கும் சரியான விடையும் கூறினீர்கள். அதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஆகவே, உங்கள் தம்பியருள் ஒருவனை நான் உயிர் பிழைக்கச் செய்கிறேன். யாரை நீங்கள் விரும்புகிறீர்களோ அவனது பெயரைக் கூறுங்கள்'' என அருளுடன் கூறினான்.

தருமர் தேவனைப் பணிந்து, ''நாங்கள் ஐவரும் இணைந்தே வாழ்ந்தோம். ஆகவே நீங்கள்அருள்கூர்ந்து தம்பியர் நால்வரையும் பிழைக்கச் செய்ய வேண்டும். உங்களைப் பணிந்து வேண்டுகிறேன்'' என்றார். ஆனால் அத் தேவன், ''தருமரே! அப்படிச் செய்ய

இயலாது. எவரேனும் ஒருவரை மட்டுமே உயிர் பிழைக்கச் செய்யமுடியும். எவரைத் தாங்கள் விரும்புகிறீர்கள்?'' எனக் கேட்டான். தருமர் மிகவும் மனம் கலங்கினார். ஆயினும் ஒருவாறு மனம் தேறினார். சிறிது நேரம் சிந்தித்தார்.

''தேவா! தங்களின் கருத்து அப்படியானால், நான் என்ன செய்யமுடியும்? ஒருவனை மட்டுமே உயிர்ப்பிக்க முடியும் என்றால் நகுலனை மீட்டுத் தாருங்கள்'' என்று கேட்டார்.

அத் தேவனுக்கு வியப்பு மேலும் மிகுதியாயிற்று. பெரு உடலோடு, இணையில்லாத வலிமையுடையவன் பீமன். அவனைக் கேட்பார் எனத் தேவன் எண்ணியிருந்தான். இல்லையெனில் வில்லேந்திப் போர் புரிவதில் இணையில்லாத அருச்சுனனையாவது கேட்பார் எனக் கருதினான். ஆனால் அவர் நகுலனைக் கேட்டதும் தேவனுக்கு ஒன்றும் புரியவில்லை. தருமர் நிலை தடுமாறித் தவறாகக் கேட்டுவிட்டாரோ? என ஐயங்கொண்டான்.

எனவே, ''தருமரே! அமைதியாகச் சிந்தித்துக் கேளுங்கள். உங்களுக்கு எந்தத் தம்பி வேண்டும்?'' என்றான். மீண்டும் தருமர் உறுதியாக, 'நகுலனை எழுப்பித் தாருங்கள்'' என்றார். தேவனுக்கு வியப்புத் தாங்கவில்லை. தருமரை நோக்கி, ''தருமரே! மற்போரில் நிகரில்லாமல் விளங்கும் பீமனை ஏன் நீங்கள் கேட்கவில்லை? தோல்வியே அறியாத வில்வீரன் அருச்சுனனையாவது கேட்டிருக்கலாமே? இவ்விருவரையும் விட்டுவிட்டு நகுலனையா உயிர்பிழைக்க வேண்டுமென்கிறீர்கள்?'' எனக் கேட்டான். 'ஆம்' என்றார் தருமர்.

'உங்களுக்குப் பெருந்துணையாய் இருக்கக்கூடிய பீமனையும் அருச்சுனனையும் கேட்காமல் நகுலனைக்

கேட்கக் காரணம் என்ன?'' எனத் தேவன் கேட்டான். தருமர் ''தேவா! மனிதன் நேர்மையாக நடந்தால் அறம் அவனைக் காப்பாற்றும். அறம் தவறினால் அந்த அறமே அவனைக் கொன்றுவிடும். நான் அறத்தை மீறி நடந்தால் அதுவே என்னைக் கொன்றுவிடும். என் தந்தைக்குக் குந்தி, மாத்திரி என மனைவியர் இருவர். நாங்கள் இருவரையும் ஒன்றாகவே மதிக்கிறோம். நான், பீமன், அருச்சுனன் ஆகியோர் குந்தியின் மக்கள். நகுலன் மாத்திரியின் மகன். எங்களது இரண்டு தாய் மாரும் மக்களை உடையவராக இருக்கவேண்டும். குந்தியின் மகனாக நான் உயிரோடு இருக்கிறேன். மற்றொரு தாயான மாத்திரிக்கும் மகன் ஒருவன் உயிரோடு இருக்கவேண்டும். பீமனையோ அருச்சுனனையோ மட்டும் உயிர்பிழைக்கச் செய்தால் மாத்திரியின் மரபு அழிந்துவிடும். இஃது அறமாகாது. அதனால்தான் மாத்திரியின் மகனான நகுலன் உயிர் பிழைக்க வேண்டும் என வேண்டினேன்'' என்று கூறினார்,

தன்னலமின்றித் தருமர் பேசியதைக் கேட்டவுடன் தேவன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான்; பெயருக்கு ஏற்றபடி தருமர் அறம் தவறாமல் இருப்பதை எண்ணி வியப்படைந்தான். அவரது நேர்மையான மனம் அவன் உள்ளத்தை உருக்கியது. ''தருமரே! உங்கள் நேர்மையை நான் பாராட்டுகிறேன். எப்படிப்பட்ட துன்பம் வந்தபோதிலும் அறத்திலிருந்து தவறாதவர் நீங்கள் என்பதைத்தெரிந்துகொண்டேன். பெரியோர்கள் எப்போதும் நேர்மை தவறமாட்டார்கள் என்பதை அறிந்தேன். உங்களைப் போன்ற நல்லவர்கள் சிலர் இருப்பதால்தான் நாட்டில் மழை பெய்கிறது. உங்கள் நேர்மைக்குப் பரிசளிக்க விரும்புகிறேன். உங்கள் தம்பியர் அனைவரையும் உயிர்பிழைக்கச் செய்கிறேன். அப்படி நான் செய்யாவிட்டால் நீங்கள் கடைப்பிடித்து வரும் அறமே என்னை அழித்துவிடும். உங்கள் தம்பியர்

நால்வரும் உயிர்பிழைப்பார்கள். இவர்களுடன் நீங்கள் நீண்டநாள் நலமுடன் வாழ்வீர்களாக'' என வாழ்த்துக் கூறினான்.

அப்போது பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய நால்வரும் தூங்கி எழுபவர்போல் எழுந்தனர்; நடந்ததைத் தருமர்மூலம் அறிந்தனர். தேவனை வணங்கி ''எங்கள் குற்றத்தை மன்னிக்கவேண்டும். உங்களை யாரென்று தெரியாமல் புறக்கணிப்புச் செய்து விட்டோம். இனிமேல் இப்படித் தவறு செய்ய மாட்டோம். மூத்தோரது அறிவுரைகளைக் கேட்டு நடப்போம்'' எனக் கூறினர். தருமர் தம்பியர் நால்வருடனும் தம் இருப்பிடம் திரும்பினார்.

'நிலையில் பிரியேல்'

— ஆத்திசூடி

## 11. முருகனும் கண்ணனும்

குன்றத்தூர் என்னும் ஊரில் முருகன், கண்ணன் என்ற சிறுவர் இருவர் இருந்தனர். இருவரும் உயர் நிலைப் பள்ளியில் படித்து முடித்தபின் வாணிகம் செய்தனர். ஒரு நாள் காலையில் இளைஞர்கள் இருவரும்பல்லாவரம் என்னும் ஊரில் கூடும் சந்தைக்குச் சென்றனர். இருவரும் தங்களுடைய சிறிய கடைகளில் தாங்கள் கொண்டுபோன பொருள்களை எடுத்துவைத்து விற்பதற்காக உட்கார்ந்தனர். முருகன் தன்னுடைய கடையில் பழங்களும் காய்கறிகளும் வைத்திருந்தான். கண்ணன் தன் கடையில் தேங்காய்களை வைத்திருந் தான். இருவர் கடைகளிலும் பலர் பொருள்களை வாங்கிக்கொண்டு போனார்கள்.

முருகனுடைய கடையில் எல்லாப் பொருள்களும் விற்றுக் கடைசியாக ஒரு முலாம்பழம் மட்டும் மீதம் இருந்தது. மாசிலாமணி என்ற பெரிய மனிதர் ஒருவர் முருகனின் கடைக்கு வந்தார். அந்தப் பெரிய முலாம் பழத்தின்மேல் கையை வைத்தார். 'இவ்வளவு பெரிய முலாம்பழமாக இருக்கிறதே! என்ன விலையடா தம்பி! என்று கேட்டார்.

''ஐயா எல்லாப் பழங்களும் விற்பனையாகிவிட்டன. இந்த ஒரு பழந்தான் இருக்கிறது. இது நல்ல பழம் போலத் தோன்றினாலும் இதில் கொஞ்சம் அழுகி இருக் கிறது ஐயா!'' என்று சொல்லி முருகன் அந்த முலாம் பழத்தின் மறுபக்கத்தைத் திருப்பிக் காட்டினான்.

''ஆமாம், அழுகி இருக்கிறது; எனக்கு அந்தப் பழம் வேண்டாம்'' என்று கூறிவிட்டார். பழம் வேண்டிய

தில்லை என்று சொன்ன பெரியவர் முருகனின் வஞ்சகம் இல்லாத முகத்தைப் பார்த்தார். ''தம்பி, உன் பழத்தைப்பற்றி நீயே குறைகூறலாமா?'' என்று கேட்டார்.

''ஐயா! 'நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டா' என்னும் நெறியைப் பின்பற்றியே நான் நடக்கிறேன். கற்றபடி நடக்காவிட்டால் படித்துப் பயன் என்ன?'' எனப் பணிவுடன் கூறினான் முருகன்.

அப்பெரியவர், '''தன் நெஞ்சு அறிவது பொய்யற்க, என்றார் திருவள்ளுவர். வள்ளுவர் வாய்மொழிப்படி நீதியைக் கடைப்பிடித்து நடக்கும் உனக்கு ஒரு குறையும் ஏற்படாது. நீ உன் மனச்சான்றின்படியே நட. ஒரு பொழுதும் இதை நீ மறவாதே நான் இனிமேல் உன்னுடைய கடையை மறக்கமாட்டேன்'' என்று கூறிச் சென்றார். அந்தப் பெரியவர் அடுத்திருந்த கண்ணனின் கடைக்குப் போனார். அங்குள்ள தேங் காயை விலை பேசினார். இது என்ன நல் தேங் காயா? பால்பிழிய வருமா?'' என்றார்.

''ஆம், ஐயா! நல்ல தேங்காய். நேற்றுத்தான் மரத்திலிருந்து பிடுங்கியது. நான்தான் உரித்தேன். வாங்கிக் கொண்டு போய்ப் பாருங்கள். இதற்காக நான் என்ன பொய்யா சொல்லப் போகிறேன்?'' என்று நயவஞ்சகமாகப் பேசி அவரிடம் தேங்காயை விற்று விட்டான். பெரியவர் அவன் பேச்சை நம்பித் தேங்காயை வாங்கிக்கொண்டு வீட்டிற்குச் சென்றார்.

கண்ணன் முருகனைப் பார்த்து, ''நீ என்னடா முழு மூடனாக இருக்கிறாயே! முலாம்பழத்தில் இருக்கிற குறையை நீயே எடுத்துக் காட்டலாமா? அவர் என்ன உன்னைக் கேட்டாரா? 'எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை' என்பதுபோல நீயாக ஏன் முந்திக்கொண்டு



சொன்னாய்? இனிமேல் இந்தப் பழத்தை யார் வாங்கப் போகிறார்கள்? நீ சொன்ன உண்மைக்காக அந்தப் பழத்தை வீட்டுக்குத்தான் சுமந்துபோக வேண்டும். இல்லையானால் எங்கேயாவது தூக்கி எறிந்துவிட்டுப் போ. நான் எப்படி அந்த அழுகல் தேங்காயை விற்றேன் பார்த்தாயா? அவர் என்ன அதைப்பற்றி அறிந்துவிட்டார்? நல்ல தேங்காய்களை விற்ற விலைக்குக் குறையாமல்தான் அதனையும் விற்றேன். அந்த முலாம்பழத்தை ஒன்றும் கவனிக்காமலேயே அவர் வாங்கிக்கொண்டு போயிருப்பார். நீதான் சத்தியவான் போலப் பேசி வியாபாரத்தைக் கெடுத்துக்கொண் டாய்'' என்றான்.

''கண்ணா! இன்று காலையிலிருந்து விற்றுச் சம்பாதித்ததே போதும். இதைப்போல இன்னொரு மடங்கு காசு கிடைப்பதாக இருந்தாலும் நான் பொய் சொல்லி ஏமாற்றிப் பொருள் சேர்க்கப் போவதில்லை. பிறரைக் கெடுத்துச் சம்பாதிக்க வேண்டும் என்னும் எண்ணம் எனக்கில்லை.

''கற்றதன்படி வாழ்க்கையில் நடப்பதுதான் அறிவுடைமையாகும். வாணிகம் செய்பவர் பிறர் பொருளையும் தம் பொருள்போல நினைக்கவேண்டும். அதுதான் நடுவுநிலைமை ஆகும். அழுகல் காயை நெற்றுத்தேங்காய் என்று சொல்லி ஏமாற்றியதை நீ பெருமையாகப் பேசுகிறாய். நல்லவர்கள் மனம் வருந்தும்படியாக நாம் நடக்கக்கூடாது. உண்மையைப் பேசியதால் இன்று எனக்கு ஒரு வாடிக்கையாளர் கிடைத்தார். இனிமேல் அந்தப் பெரியவர் என் கடையிலேதான் பொருள்களை வாங்குவார். இனி அவர் உன்னுடைய கடைக்கு வரவே மாட்டார். இப்பொழுது நீ சிந்தித்துப் பார். யாருக்கு நன்மை. யாருக்கு இழப்பு என்பது தெரியும்'' என்று முருகன் பதில் உரைத்தான்.

முருகன் கூறியதுபோலவே மறுநாள் அந்தப் பெரியவர் வந்தார். முருகனிடத்தில் தமக்குத் தேவையான காய்கறிகளையும் பழங்களையும் வாங்கினார் தமக்குத் தெரிந்தவர்களிடத்தில் எல்லாம், "முருகன் கடையில் நல்ல பொருளாகக் கிடைக்கும்; விலையும் மலிவு. நான் அங்கேதான் வாங்கி வருகிறேன். நீங்களும் வாங்கிப் பாருங்கள் தெரியும்" என்று சொன்னார். அவர் கூறியபடி பலரும் முருகன் கடையிலேயே பொருள்களை வாங்கினர். அதனால் முருகனுடைய வாணிகம் பெருகிற்று.

பொய் சொல்லி ஏமாற்றிய கண்ணன் கடைக்கு அந்தப் பெரியவர் செல்வதே இல்லை. ஏனைய மக்களும் அவன் கடைக்குச் சென்று பொருள் வாங்குவது இல்லை. அதனால் அவன் நாளடைவில் வருவாய் இழந்து வருந்தினான்.

பெரியவர் மாசிலாமணிஅவர்களுக்குச் சொந்தமான பண்டசாலை ஒன்று இருந்தது. அந்தப் பண்டசாலைக்கு உண்மையும் நம்பிக்கையும் உடைய ஒருவன் தேவைப் பட்டான். பெரியவர் மாசிலாமணி முருகனுடைய பண்புகளை நாள்தோறும் கண்டு வந்தமையால் அவனைத் தம்முடைய பண்டசாலையில் வேலைக்கு அமர்த்திக்கொள்ள நினைத்தார். முருகனிடத்தில் அவர் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். முருகனும் பண்டசாலையில் வேலைக்கு அமர விருப்பம் தெரிவித்தான். பண்டசாலையில் வேலையை ஏற்ற முருகன் கடைக்கு வரும் அனைவரிடமும் இனிய முகத்துடன் இன்சொல் பேசி எல்லாருடைய அன்பையும் பெற்றான். பெரியவர் மாசிலாமணி முருகனின் உண்மை, நேர்மை, உழைப்பு ஆகியவற்றைக் கண்டு மகிழ்ந்தார். சில ஆண்டுகளுக்குப் பின் பெரியவர் முருகனைப் பண்டசாலையில், ஒரு பங்காளி ஆக்கிச்

கொண்டார். முருகன் பேரும் புகழும் பெற்றுச் செல்வச் செழிப்புடன் இனிது வாழ்ந்தான்.

*"உண்மை உயர்வளிக்கும்."*

*"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவும் தமபோல் செயின்."*

— *திருக்குறள்*

## 12. பூங்கோதை

பூங்கோதை அழகான ஒரு பெண். அவள் அன்பும் அறிவும் உடையவள். அவள் ஒருபொழுதும் கர்வம் கொள்வதில்லை. அவள் எப்போதும் சுறுசுறுப்பாகவே காணப்பட்டாள், அவள் பார்வையில் கனிவும் பொலி வும் நிறைந்திருந்தன. அப் பெண்ணை அவள் தாய் கண் இமை காப்பதுபோலக் காத்துவந்தாள். பூங்கோதை பெற்றோர்க்குச் செய்யவேண்டிய பணி விடைகளை எல்லாம் விருப்பத்தோடு செய்து வந்தாள். பெற்றோர் அவளைச் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தனர்.

அன்பு நிறைந்து மகிழ்ச்சி பொங்கிய அவர்கள் குடும்பத்தில் சொல்ல முடியாத ஒரு துன்பம் ஏற்பட்டது. ஒரு நாள் திடீரெனப் பூங்கோதையின் தாய் காய்ச்ச லாகப் படுத்தாள். எள்ளளவும் இரக்கம் என்பதே இல்லாத எமன் அவள் உயிரைக் கவர்ந்து சென்றான். தந்தையும் மகளும் துன்பக் கடலில் சிக்கித் தவித்தனர். காலப்போக்கில் இயற்கை அவர்கட்கு அமைதியை அளித்தது.

பூங்கோதையின் தந்தை வேம்பு என்னும் பெண்ணை மறுமணம் புரிந்து கொண்டார். பூங்கோதை, சிற்றன் னையின் சொற்படி நடந்துவந்தாள். வேம்பு எப்பொழுதும் அவளைக் கடுமையாக வேலை வாங்கிக் கொண்டிருந்தாள். சிறுமி அவள் இட்ட வேலையைத் தட்டாமல் செய்துவந்தாள். வேம்புக்குப் பெண் குழந் தைகள் இருவர் இருந்தனர். ஒருத்திக்கு நங்கை என்று பெயர், மற்றொருத்திக்கு மங்கை என்று பெயர்,

நங்கையும் மங்கையும் எந்த வேலையையும் செய்யாமல் செல்வமாக வளர்ந்தார்கள்.

பூங்கோதை காலை எழுந்ததுமுதல் இரவு படுக்கும் வரையிலும் வீட்டு வேலைகளைச் செய்துகொண்டே இருந்தாள். பூங்கோதைக்கு நல்ல ஆடை எதுவும் இல்லை. கிழிந்து தொங்கும் அழுக்கு உடையையே அவள் உடுத்திவந்தாள். பூங்கோதை சமையல் செய்து கொண்டே தன் தாய் உயிரோடு இருந்தபொழுதுதான் மகிழ்வுடன் இருந்ததை எண்ணிப் பார்ப்பாள். அந்த நல்ல காலம் இனி வருமா? என ஏங்கிக்கொண்டிருப்பாள். ஒவ்வொரு நாளும் படுக்கையைவிட்டுக் காலையில் எழும்பொழுதும் இரவில் படுக்கும்பொழுதும் அன்னையை மறவாமல் வழிபட்டுவருவாள்.

பூங்கோதை வாழ்ந்த நகரில் இளவரசன் ஒருவன் இருந்தான். அவன் நல்ல அழகுடையவன். தனக்கு விருப்பமான ஓர் அழகியை மணந்து வாழ விரும்பினான். அவன் தன் நாட்டிலுள்ள அழகிகளை எல்லாம் நாட்டியம் ஆட அழைத்திருந்தான். அந்நாட்டு மங்கையர் பலர் அழகுக்கு அழகு செய்துகொண்டு கவர்ச்சியாகச் சென் றனர். இளவரசன் அனைவரையும் வரவேற்று உப சரிக்க ஏற்பாடு செய்திருந்தான். வேம்பு தான் பெற்ற இரண்டு பெண்களையும் ஒப்பனை செய்துகொண்டு நாட்டிய அரங்குக்கு அழைத்துச் சென்றாள். தாயற்ற பூங்கோதைக்குக் கிழிந்த ஆடையன்றி வேறு இல்லை.

நங்கையும் மங்கையும் பூங்கோதையைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே தாயுடன் சென்றனர். பூங்கோதைக்குத் தானும் அந்த நாட்டியத்தைக் காண வேண்டும் என்று விருப்பம். விருப்பம் இருந்தால் மட்டும் போதுமா? ''தாயற்றுப் போனால் சீரற்றுப் போச்சு'' என்னும் பழமொழியின் உண்மையை அவள் அப்பொழுதுதான் உணர்ந்தாள். நங்கையும் மங்கையும் தாயுடன் வண்டியிலேறிச் சென்றனர்.

பூங்கோதை சமயலறைக்குச் சென்றாள். தன் தாயை நினைத்து அழத்தொடங்கினாள். 'திக்கற்ற வர்க்குத் தெய்வமே துணை'' அன்றோ? அங்கே ஒரு தேவதை தோன்றியது. பூங்கோதையின் தாயே தெய்வமாக வந்தாள். ''அம்மா! அழாதே; எழுந்து உனக்கு என்னவேண்டும் சொல்'' என்றாள். பூங்கோதை தன் விருப்பத்தைத் தெரிவித்து, ''தாயே! எனக்குச் துணையாக வந்த தெய்வமே! உனக்கு நன்றி'' என்று கூறி வணங்கினாள்.

தேவதை ஒரு மந்திரக்கோலை எடுத்து அவள்மீது தடவியது. உடனே பூங்கோதை பேரழகு வாய்ந்த இளவரசி போல் ஆடை அணிகலன்களுடன் விளங்கினாள்; தனக்குத் தானே அடையாளங் காணமுடியாத அளவுக்கு அழகுடன் மிளிர்ந்தாள். அத் தேவதை அவளைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றது. அங்கே நான்கு சுண்டெலிகளும் ஒரு பூசனிக்காயும் இருந்தன. அவற்றின்மீது அத்தேவதை மந்திரக்கோலால் தடவியது. உடனே, பூசனிக்காய் ஒரு வண்டியாயிற்று. நான்கு சுண்டெலிகள் இருந்த இடத்தில் இரண்டு குதிரைகளும் இரண்டு சேவகர்களும் காணப்பட்டனர். அவர்கள் இருவரும் அரண்மனை ஆள்களைவிடப் பெரிய உருவமுடையவர்களாகவும் பளபளப்பான சட்டை போட்டுக் கொண்டும் இருந்தனர். குதிரைகள் இரண்டும் அரசனின் குதிரையைவிட நன்றாக இருந்தன. அப்பொழுது தேவதை பூங்கோதையை வண்டியில் ஏறச் சொன்னது. பூங்கோதை வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். ''பெண்ணே! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். மறந்துவிடாதே. என் சொல்லை மீறி நடக்காதே! நீ அரண்மனைக்கு போய் இளவரசனுடன் நாட்டியத்தில் ஈடுபட்டு இருந்தாலும் சரியாக இரவு பன்னிரண்டு மணிக்கெல்லாம் அந்த இடத்தைவிட்டு வந்துவிட வேண்டும்'' என்று தேவதை கூறியது.

பூங்கோதை தேவதைக்கு நன்றிகலந்த வணக்கத்தைச் செலுத்தினாள். வண்டியை அரண்மனைக்கு ஓட்டச் சொன்னாள். குதிரைகள் இரண்டும் விரைந்து சென்றன. வண்டி அரண்மனை வாயிலை அடைந்தன. பூங்கோதை வண்டியிலிருந்து இறங்கினாள். கண்டவர்கள் எல்லாரும் வியந்தனர். அவளைப் போன்ற அழகுடைய மங்கை எவரையுமே அவர்கள் கண்டிலர். இளவரசன் அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவளுடன் சேர்ந்து நடனமாடினான். வந்திருந்த பெண்கள் எல்லாரும் பூங்கோதையைப் பார்த்துப் பொறாமை கொண்டனர். 'இவள் மண்ணுலக மகளோ? விண்ணுலக மகளோ?' என்று ஐயங்கொண்டனர். இளவரசனையும் பூங்கோதையையும் ஒருசேரக் கண்ட பெரியவர்கள், இருவரும் மணந்துகொள்ளப் பொருத்தமானவர்கள் என்று பேசிக்கொண்டார்கள்.

வேம்புவின் மகளிரான நங்கையும் மங்கையும் பெரிதும் ஏமாற்றம் அடைந்தனர். இளவரசன் அவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அங்கு வந்து இளவரசனுடன் கைகோத்து ஆடிய அந்தப் பெண்ணை அவர்களால் அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. எனினும் அவர்கள் அவ்வழகியின்மீது பொறாமை கொண்டனர்.

பூங்கோதையும் இளவரசனும் ஆடிப்பாடிக்கொண்டு இருந்தமையால் நேரம் கடந்ததே தெரியவில்லை. அப்பொழுது அரண்மனையில் பன்னிரண்டு மணி அடிக்கத் தொடங்கினார்கள். முதல் மணியோசை கேட்டதும் பூங்கோதை திடுக்கிட்டாள். உடனே அங்கிருந்த அவள் வேகமாக ஓடினாள். அவ்வாறு ஓடும்பொழுது அவள் பாதங்களில் அணிந்திருந்த காலணி ஒன்று தவறிவிட்டது. இருந்தாலும் அதற்காக அவள் தாமதிக்கவில்லை. தேவதையின் சொற்படி வண்டியில் ஏறி அமர்ந்தாள். முன்போலவே குதிரைகள் வேகமாகச் சென்றன.



இளவரசன் அந்தப் பெண்ணைத் தடுத்து நிறுத்த முயன்றான். ஆனால் முடியவில்லை. வண்டி காற்றை விடக் கடுவேகமாகப் பறந்துசென்றதைக் கண்டான். வண்டி மறைந்ததும் இளவரசன் மண்டபத்திற்குத் திரும்பினான். வரும்வழியில் படிக்கட்டின்மேல் அவள் அணிந்திருந்த கண்ணாடியினாலான காலணி ஒன்று கிடக்கக் கண்டான். அந்தக் கண்ணாடிக் காலணியை எடுத்து வைக்குமாறு ஆணையிட்டான்.

பூங்கோதை தன் வீட்டினை நெருங்கினாள். வண்டியிலிருந்து இறங்கினாள். உடனே வண்டி பூசனிக் காயாக மாறியது. வேலைக்காரர்களும் குதிரைகளும் சுண்டெலிகளாக உருமாறின. அவள் திரும்பவும் பழைய தோற்றத்தை அடைந்தாள். அரண்மனையிலிருந்து வேம்புவும் அவள் மகளிரான நங்கையும் மங்கையும் ஒரு மணிநேரம் கழித்து வீட்டிற்கு வந்தனர். அவர்கள் அனைவர் முகத்திலும் புறப்படும்போது காணப்பட்ட மலர்ச்சி இல்லை; மிகவும் கோபமாக இருந்தனர். எவ்விதப் பேச்சும் இல்லாமல் அவரவர் படுக்கையில் படுத்து உறங்கினர்.

மறுநாள் இளவரசன் அந்தக் கண்ணாடிக் காலணிக்கு உரியவர் யார் என்பதைக் கண்டறிய ஆள்களை அனுப்பினான். பணியாளர்கள் கண்ணாடிக் காலணியை எடுத்துக்கொண்டு வீதிதோறும் வீடுவீடாகச் சென்றனர். அந்தக் காலணி எவருடைய காலுக்கும் பொருத்தமானதாக இல்லை. கடைசியாக அவர்கள் பூங்கோதையின் வீட்டிற்கு வந்தனர். மாற்றாந்தாய்ப் பெண்கள் அந்தக் காலணியைத் தங்கள் பாதங்களில் நுழைத்துப் பொருத்த அரும்பாடுபட்டனர். ஆனால், அவர்களால் அது முடியவில்லை. அப்பொழுது ஒரு பணியாள் தோட்டத்திலிருந்து தண்ணீர்க் குடத்தை எடுத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்த பூங்கோதையைப் பார்த்தான். அவளிடம் அந்தக் கண்ணாடிக்

காலணியைக் கொடுத்து அணியச் சொன்னான். பூங் கோதையின் காலிற்கு அது பொருத்தமாக இருந்தது.

காவலர்கள் பூங்கோதையைப் பார்த்து, "நீ எங்க ளுடன் அரண்மனைக்கு வரவேண்டும். எங்கள் இள வரசரின் ஆணை இது. உடனே புறப்படவேண்டும்" என்றார்கள். வேம்பு வேறு வழியின்றி பூங்கோதையை அனுப்பிவைத்தாள். பூங்கோதை அரண்மனையை அடைந்தாள். இளவரசன் பூங்கோதையைக் கண்டதும் பெரிதும் மகிழ்ந்தான். தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பூங்கோதையை மணந்து இல்லறமாம் நல்லறத்தை நன்கு நடத்தி மக்கட்பேறு பெற்று இனிதே வாழ்ந்தான்.

*"மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டா."*

*— உலகநீதி*

*"மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்."*

*—கொன்றைவேந்தன்*

# 13. விருந்து போற்றிய வேளாளர்

சோழ வள நாட்டில் இளையான்குடி என்னும் ஓர் ஊர் உண்டு. நெல்வயல்களும் கரும்புத் தோட்டங்களும் நிறைந்த வளமான ஊர் அது. அவ்வூரில் மாறன் என்ற ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் உழுதுண்டு வாழ்ந்த உத்தமர்; தம் வயல்களில் விளைந்த தானியங்களை இல்லாதவர்க்கு உதவி வந்தார். பசி என வந்தவர்க்குப் புசி எனச் சோறளித்து மகிழ்ந்தார். யார் வந்தாலும் உபசரித்து அவருடைய பசியறிந்து உணவளித்து அனுப்புவார். ஏழை மக்கள் பலர் அவரால் பசி தீர்ந்து மகிழ்ந்தனர். மக்களுடைய வயிற்றுப் பசியைப் போக்கு வதையே கடவுளுக்குச் செய்யும் தொண்டாக எண்ணி மகிழ்ந்தார். மாறன், இறைவனிடம் மிகுந்த பக்தி கொண்டவர். மக்களிடத்தில் இறைவன் உள்ளான் என்பதை நன்கு உணர்ந்தவர். எனவே, இறைவனது பெயரைச் சொல்லிக்கொண்டு எவர் வந்தாலும் அவரை இறைவனாகவே எண்ணி வழிபடும் இயல்புடையவர்.

மாறன் மனைவியும் மிகுந்த நற்குணம் உடையவர். கணவன் குறிப்பறிந்து ஒழுகும் நல்லியல்பு உடையவர். கணவரது தொண்டில் தாமும் மகிழ்ச்சியோடு ஈடு பட்டார். அவரது ஒத்துழைப்பு இல்லையெனில் மாற னாரால் வருபவர்களின் அழிபசியைத் தீர்க்க முடியாது. கணவனும் மனைவியும் சேர்ந்து அனைவருக்கும் உதவி வந்தனர். மக்கள் அவர்களைப் போற்றிப் புகழ்ந்தனர் இவ்வாறு சிறப்பாக இருவரும் சில ஆண்டுகள் வாழ்ந்துவந்தனர்.

வந்தவர்களுக்கெல்லாம் நாள்தோறும் உணவு அளித்துவந்ததால் நாளடைவில் அவர்கள் செல்வம்

படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்தது. கடைசியில் அவர்கள் மிகுந்த வறுமை நிலையை அடைந்தனர்; தமது நிலங்களைச் சிறிது சிறிதாக விற்றனர்; அத் தொகையைக்கொண்டு வழக்கம்போல வந்தவர்களுக்கு உணவு அளித்து மகிழ்ந்தனர். ஒரு சிறிய நிலம்தவிர எஞ்சிய எல்லா நிலங்களையும் விற்றாயிற்று. கணவன் மனைவி ஆகிய இருவருக்குமே உணவுக்கு வழி இல்லாத நிலை ஏற்பட்டது. எனினும் அவர்கள் இருவரும் தாங்கள் கொண்ட கொள்கையிலிருந்து ஒருசிறிதும் பிறழவில்லை. எவ்வளவு துன்பப்பட்டாலும் வருபவர் களுக்கு உணவு வழங்குவதை அவர்கள் நிறுத்தவே இல்லை. மிகுந்த வறுமை நிலையிலும் தங்கள் கொள்கையிலிருந்து சிறிதும் தவறாத அவர்கள் பெருமை உடையவர்கள் அல்லரோ?

ஒரு நாள் நள்ளிரவு நேரம். எங்கும் ஒரே இருள். மழை 'சோ' வெனக் கொட்டிக்கொண்டிருந்தது. மாற னாரும் அவரது மனைவியாரும் அன்றிரவு உணவின்றிப் படுத்து உறங்கினர். அப்போது அவர்கள் வீட்டின் கதவினைத் தட்டும் ஓசை கேட்டது. மாறனார் எழுந்து சென்று கதவைத் திறந்தார். இறைவன் அடியார் ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவர் மழையால் நனைந்திருந்தார்; பசியால் மிகவும் களைப்படைந்திருந் தார். மாறனார் அவரைப் பார்த்தார்; மனம் பதைத்தார். உள்ளே அவரை அழைத்து வந்து உட்காரவைத்தார். அவரது ஈர உடம்பை உலர்ந்த துணியால் துடைத்தார்; வந்தவர் பசியால் வாடியிருப்பதைக் கண்டு மனம் வருந்தினார். அவரது பசியை எப்படியாவது போக்க வேண்டும் என எண்ணினார். வீட்டினுள் சென்றார். தம் மனைவியை அழைத்து, "வந்துள்ள அடியவர் மிகவும் முதியவர். பசியால், மிகவும் களைப்படைந்துள்ளார். கண்கள் பஞ்சடைந்துள்ளன; கால்கள் தள்ளாடுகின்றன. எப்படியாவது அவரது பசியைப் போக்கியாகவேண்டும்! என்ன செய்வது?" என்று கவலையோடு கேட்டார்.

அந்த அம்மையார், "நமக்கோ இரவு உணவு இல்லை. வீட்டில் சோறு சமைக்க எதுவும் இல்லை. கடன் கொடுப்பவரிடமெல்லாம் முன்பே வாங்கியாகி விட்டது. நாம் வாங்கிய கடனைத் திருப்பித் தரவும் இல்லை. எனவே, எவரும் கடன் தரவும் மாட்டார்கள், யாரிடமாவது கேட்டுப் பார்க்கலாம் என்றாலும் நள்ளிரவு ஆகிவிட்டது. இனி எவரையும் கேட்க இயலாது'' என வருந்திக் கூறினார்; தம் கணவரின் துன்பம் கண்டு எப்படியும் அதனைத் தீர்க்க வேண்டும் என எண்ணினார். உடனே தம் கணவரைப் பார்த்து, "இன்று காலையில் நீங்கள் வயலில் விதைத்த நெல் முளைகளை வாரி வந்தால் ஓரளவு சோறு சமைக்க முடியும். இதைத் தவிர இப்போது வேறு வழி இல்லை'' எனக் கூறினார்.

எப்படியாவது வந்தவருக்கு உணவு அளிக்க வேண்டும் என நினைத்துக் கொண்டிருந்த மாறனார், மனைவி சொன்னதைக் கேட்டதும் மகிழ்ந்தார். "நெல் விளையவில்லையென்றாலும் குற்றமில்லை. வந்துள்ள பெரியவர் பசியைத் தீர்ப்பதே நமது முதல் கடமை'' என முடிவு செய்தார். உடனே ஒரு கூடையை எடுத்துத் தலையில் கவிழ்த்துக்கொண்டு வயலை நோக்கிப் புறப் பட்டார். நள்ளிரவு நேரம் ஆதலால் எங்கும் ஒரே இருள். மழைக்காலம் ஆகையால் வானில் மீன்கள்கூடப் காணப்படவில்லை. செல்வதற்குரிய வழி சரியாகத் தெரியவில்லை. ஆயினும் மாறனார் மன உறுதியுடன் புறப்பட்டார். நாள்தோறும் நடந்து சென்று பழக்கப் பட்ட வழியாதலால் காலினால் தடவிக்கொண்டே சென்றார். அவர் தம்முடைய வயலை அடைந்தார். அன்று விதைத்த நெல் மணிகளைக் கைகளால் தடவிப் பார்த்துக் குவித்தார். சேறுபடிந்த நெல் விதைகளை வாரிக் கூடையில் வைத்தார். அதைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு வந்த வழியாகவே விரைந்து திரும்பினார்.



மாறனாரது மனைவியார் வீட்டின் வாயிலிலேயே காத்திருந்தார். கணவர் வந்ததும் கூடையை இறக்கி வைத்தார். மாறனார், ''விரைவில் உணவு சமைத்து விடு'' என்றார். மனைவியார், ''அடுப்பு எரிக்க விறகு இல்லையே என்ன செய்வது?'' என வருந்தினார். மாறனார் சிந்தித்தார். வீட்டின் மேல்கூரையைப் பார்த்தார். நீண்ட நாள்களாகப் பழுதுபார்க்கப் படாமையால் வீட்டுக் கூரையின் ஒரு பகுதி சரிந்து இருந்தது. அதனைக் கண்ட அவர் முகத்தில் மலர்ச்சி தோன்றியது. உடனே கூரையில் தொங்கிக்கொண் டிருந்த வாரையை இழுத்துச் சிறுசிறு துண்டுகளாக்கிக் கொடுத்தார். மனைவியார் அடுப்பைப் பற்றவைத்தார்; சேறுபடிந்த நெல்லை நன்கு நீரினால் கழுவினார்; அந்த நெல் முளைகளை ஒருசட்டியில் போட்டு அடுப்பில் வறுத்தார். நெல் முளைகளில் இருந்த ஈரம் போயிற்று. உடனே, அவ் விதைகளை உரலில் இட்டுக் குற்றினார்; நன்கு புடைத்து உமியை நீக்கி அரிசியாக்கினார்.

பின்னர் அவ்வரிசியை உலையிலிட்டுச் சமைத்தார். மனைவியார் கணவனரப் பார்த்து, ''இயன்ற அளவு சோறு ஆக்கிவிட்டேன். வெறும் சோற்றை மட்டும் எப்படி இடுவது? கறிக்கு என்ன செய்வது?'' எனக் கேட்டார். உடனே மாறனார் தோட்டத்திற்குச் சென்றார். அங்குப் பாத்தியில் வளர்ந்திருந்த கீரை களைக் கைகளால் தடவிப் பறித்துவந்தார். அக் கீரையைக் கறிசமைத்து வைத்தார். இருவருக்கும் மகிழ்ச்சி. எப்படியாவது வந்துள்ள பெரியவரது பசியைப் போக்கிவிடலாம் என எண்ணினர்.

மாறனார் இலையினைப் போட்டுவிட்டுப் பெரிய வரை எழுப்பச் சென்றார். அவருடைய மனைவி சோற்றையும் கறியையும் கொண்டுவந்து வைத்தார். பெரியவரை எழுப்பச் சென்ற மாறனார் திடுக்கிட்டார். மழையில் நனைந்து குளிரால் நடுங்கிப் பசியால் வாடி

உறங்கிக்கொண்டிருந்த அந்தப் பெரியவரை அங்குக் காணவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தார். எவரையும் காணவில்லை. செய்தியறிந்த மனைவியாரும் பதறினார். 'வீடுதேடி வந்த பெரியவர் உண்ணாமல் சென்றுவிட்டாரே! நீண்டநேரம் ஆகிவிட்டமையால் போய்விட்டாரோ?' என எண்ணி இருவரும் மனம் வருந்தினர். அப்போது வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

"உங்கள் இருவருடைய நல்ல மனத்தை அறிந்து கொள்ளவே வந்தேன். எவ்வளவு துன்பம் வந்த போதிலும் கொள்கையிலிருந்து மாறாத உங்கள் மன உறுதியைப் பாராட்டுகிறேன். உங்களைப் போன்ற நல்லவர்களால்தாம் அறம் அழியாமல் உள்ளது. நீங்கள் புகழோடு நீண்டகாலம் வாழ்வீர்களாக!" என இறைவன் வாழ்த்தி மறைந்தான். இச் செய்தியை அறிந்த மக்கள் அனைவரும் அவ்விருவரையும் போற்றிப் புகழ்ந்தனர்.

"ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும்
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து."

—நல்வழி

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு."

—திருக்குறள்

# 14. மனிதனும் விலங்கும்

மகத நாட்டில் தத்தன் என்ற ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் ஏழை. அவனுக்கு ஆறு பிள்ளைகள் இருந்தனர். குழந்தைகளுக்கு வயிறார உணவளித்து அவனால் காப்பாற்ற முடியவில்லை. குழந்தைகள் பசியால் மிகவும் வருந்தினர். தத்தன் மனைவி கணவனைப் பார்த்து, ''உங்கள் மனம் கல்லா? நம் குழந்தைகள் பசியால் துடிக்கின்றன. ஆண் மகனாகிய நீங்கள் சோம்பேறியாக இருக்கலாமா? உழைத்துப் பொருள் சம்பாதிப்பதுதான் ஆண்களுக்கு அழகு. எங்கேயாவது சென்று எந்தத் தொழிலாவது செய்து பொருளீட்டு வாருங்கள்'' எனக் கூறினாள். இதைக் கேட்ட தத்தன் மனம் வருந்தினான். உடனே வெளியே புறப்பட்டான்.

நெடுந்தூரம் நடந்துசென்று ஒரு காட்டினை அடைந்தான். நெடுந்தொலைவு நடந்ததால் மிகவும் களைப்படைந்தான். தண்ணீர் வேட்கை மிகுந்தது. தண்ணீருக்காகச் சுற்றுமுற்றும் பார்த்தான். தூரத்தில் ஒரு கிணறு தெரிந்தது. அக் கிணற்றை அடைந்தான். அதனைச் சுற்றிலும் செடிகளும் கொடிகளும் அடர்ந்து வளர்ந்திருந்தன. தண்ணீர் இருக்கிறதா? எனத் தத்தன் எட்டிப் பார்த்தான். அந்தக் கிணற்றுக்குள் ஒரு புலி, ஒரு குரங்கு, ஒரு பாம்பு ஆகியவற்றை முதலில் கண்டான். அவை அக் கிணற்றில் தவறி விழுந்தவை; வெளியேற முடியாமல் தவித்துக்கொண்டிருந்தன. கிணற்றின் நடுப்பகுதியில் கொடிகளைப் பற்றித் தொங்கிக்கொண்டிருக்கும் மனிதன் ஒருவனையும் பார்த்தான். அவனும் கிணற்றில் தவறிவிழுந்தவனே. அவன்

தத்தனைப் பார்த்து, ''ஐயா! என்னைக் காப்பாற்றுங்கள். துன்பக் காலத்தில் ஒருவனுக்கு உதவுதல் அறிவுடையோர் செயலாகும். எப்படியாயினும் என்னைக் காப்பாற்றுங்கள்'' எனக் கெஞ்சினான்.

கிணற்றினுள்ளே இருந்த புலி, ''நல்லவனே! என்னையும் காப்பாற்று'' எனக் கூறியது. இவ்வாறே குரங்கு, பாம்பு ஆகியவையும் வேண்டிக்கொண்டன. தத்தன் அந்தக் கொடிய விலங்குகளைக் கண்டு பயந்தான்; அவற்றைக் காப்பாற்றினால் துன்பம் ஏற்படுத்தும் என எண்ணினான். ஆனால், மனிதன் அவ்வாறு செய்யமாட்டான். அவனை மட்டும் காப்பாற்ற முடிவு செய்தான்; அவன்மீது இரக்கங் கொண்டான். பக்கத்திலிருந்த ஆலமரத்திலிருந்து விழுதுகளை அறுத்துத் திரித்த கயிற்றைக் கிணற்றுக்குள் விட்டான். கிணற்றிலிருந்த மனிதன் அக் கயிற்றைப் பிடித்துக் கொண்டான். தத்தன் மெதுவாக அவனை வெளியே தூக்கிவிட்டான். அவன் தத்தனிடம், ''ஐயா! நான் பக்கத்து ஊரில் வாழ்பவன். என் பெயர் வாணன். நான் ஒரு வணிகன். எந்தப் பொருளாக இருந்தாலும் அதனை விற்றுத் தருவேன். அதன் வாயிலாகக் கிடைக்கும் வருவாயில் நான் வாழ்ந்துவருகிறேன். உங்களுக்கு உதவி தேவைப்படும்போது என்னிடம் வாருங்கள்'' எனக் கூறினான்.

மனிதனை மட்டும் காப்பாற்றிய தத்தனைக் கிணற்றுக்குள் இருந்த புலி, குரங்கு, பாம்பு ஆகியவை ஏக்கத்துடன் பார்த்தன. தத்தன் மனம் இரங்கி அவற்றையும் காப்பாற்றினான். அவை நன்றியுணர்வோடு சென்றன.

அதன்பிறகு தத்தன் பொருள் தேடச் சென்றான். பல இடங்களிலும் சுற்றியலைந்தான். அவனுக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை. அதனால், பொருள் தேட முடியவில்லை; வயிற்றுக்கும் சோறு கிடைக்கவில்லை.

அவன் தன் ஊருக்குத் திரும்பிவிட முடிவு செய்தான், பிறகு அவன் தான் சென்ற வழியாகவே திரும்பினான்.

பசி அவனை வாட்டியது. மயங்கி மரத்தடியில் கிடந்தான். அப்போது அவனை யாரோ தொடுவது போன்று இருந்தது. தன்னருகில் குரங்கு ஒன்று நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். முதலில் அதனைக் கண்டு அஞ்சினான். ஆனால், அது அவனை ஒன்றும் செய்யவில்லை. அதன் கையில் பழங்கள் இருந்தன. குரங்கு அவற்றைத் தத்தனிடம் தின்னக் கொடுத்தது. பழங்களைத் தின்று பசி நீங்கிய தத்தன் அது தான் காப்பாற்றிய குரங்கே என்பதைத் தெரிந்து கொண்டான். அப்போது குரங்கு, ''ஐயா! நீங்கள் என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றினீர்கள். நீங்கள் பசியால் வாடுவதைப் பார்த்தேன். என்னால் முடிந்த கனிகளைக் கொண்டுவந்தேன். நீங்கள் செய்த உதவியை நான் மறக்கவில்லை. உங்கள் பசி தீர்ந்ததா? மேலும் வேண்டுமானால் சொல்லுங்கள். கொண்டுவருகிறேன்'' என்றது. தத்தன் மிகுந்த மகிழ்ச்சியோடு குரங்குக்கு நன்றிகூறிப் புறப்பட்டான்.

தத்தன் சிறிதுதூரம் நடந்து சென்றான். அவன் எதிரில் ஒரு புலி வருவதைக் கண்டான். அதைப் பார்த்து மிகவும் அஞ்சினான். அந்தப் புலி, தத்தன் அருகில் வந்தது. அதுவும் தன்னால் காப்பாற்றப்பட்டதே என்பதைத் தெரிந்துகொண்டான். அப் புலி, ''ஐயா! நீங்கள் சிறிது நேரம் இங்கேயே இருங்கள்'' எனக் கூறிவிட்டுச் சென்றது; விரைவில் ஒரு சிறிய மூட்டையுடன் அங்கு வந்தது. புலி தத்தனைப் பார்த்து, ''ஐயா! இஃது ஓர் இளவரசனுடையது. அவன் ஏறிவந்த குதிரை அவனுக்கு அடங்காமல் மருண்டு ஓடி இளவரசனைக் கீழே தள்ளிக் கொன்றுவிட்டது. நான் அவனைப் பார்த்தேன். அவன் விலை உயர்ந்த அணிகலன்களை அணிந்திருந்தான். இவை எனக்குப் பயன்படாதவை

என்பது எனக்குத் தெரியும்; ஆனாலும் என்னைக் காப்பாற்றிய உங்களுக்குப் பயன்படும் என்ற எண்ணத்தில் எடுத்து வைத்திருந்தேன். இவற்றை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி, அம் மூட்டையைத் தத்தனிடம் தந்தது. கொடிய விலங்காகிய புலியிடம் நன்றியுணர்வு இருப்பதைக் கண்டு தத்தன் வியப்படைந்தான். புலிக்கு நன்றி சொல்லிவிட்டு மகிழ்ச்சியோடு தத்தன் அம் மூட்டையை எடுத்துக்கொண்டு தன் ஊருக்குப் புறப்பட்டான்.

வரும்வழியில் ஒரு பெருநகரத்தைத் தத்தன் பார்த்தான். அந்நகர் வழியாக அவன் போய்க்கொண்டிருக்கும்போது எதிரில் வாணன் தன்னை நோக்கி வருவதைப் பார்த்தான். வாணன் தத்தனைப் பார்த்து, ''ஐயா! பொருள்தேடச் செல்வதாகச் சொன்னீர்களே, எவ்வளவு சேர்த்தீர்கள்?'' எனக் கேட்டான். தன்னிடமிருந்த நகைமூட்டையை வாணன் உதவியால் பணமாக்கிக்கொண்டால் நலமாக இருக்குமே என்று தத்தன் நினைத்தான். ஆகையால், தான் புலியிடம் பெற்று வந்த நகைகளை வாணனிடம் காட்டித் தனக்கு அப்பொருள் எவ்வாறு கிடைத்தது என்பதையும் விளக்கமாகக் கூறினான். ''இந்த நகைகளை எல்லாம் விற்றுப் பணமாகக் கொடுத்தால் எனக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆதலால் நீங்கள் இதனை விற்றுக் கொடுங்கள்'' என்றான். ''அதற்கென்ன? இந்த உதவியைக் கூடவா நான் செய்யமாட்டேன்? என்னைத் துன்பத்திலிருந்து காப்பாற்றிய உங்களுக்கு இவ்வுதவியைச் செய்வேன்'' என நயமாகப் பேசித் தத்தனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

வாணன் நகரத்தைச் சேர்ந்தவன்தான், இறந்த இளவரசன். இளவரசன் வேட்டைக்குச் சென்றிருந்த போது யாரோ அவனைக் கொன்றுவிட்டனர். அவன் அணிந்திருந்த அணிகலன்களையும் திருடிக்கொண்டு



போய்விட்டனர். இளவரசனின் பிணம் மட்டும் காட்டில் கிடந்தது. "இளவரசனைக் கொன்று நகைகளைத் திருடிய கள்வனைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்குச் சிறந்த பரிசு அளிக்கப்படும்" என்று அவ்வூர் அரசன் அறிவித்திருந்தான். தத்தன் கூறிய செய்தியிலிருந்து இந்த நகைகள் இறந்துபோன இளவரசனுடையவை என்பதை வாணன் தெரிந்துகொண்டான். எப்படியாவது அரசர் தருவதாக அறிவித்துள்ள பெரிய பரிசினைத் தான் அடையவேண்டும் என எண்ணினான். தத்தனே தன்னைக் காப்பாற்றியவன் என்பதையும் வாணன் நினைக்கவில்லை. தத்தனைத் தன் வீட்டிலேயே இருக்கச் சொன்னான். உடனே காவலர்களிடம் சென்று, "இளவரசனைக் கொன்று நகைகளைத் திருடிய கள்வனை நான் கண்டுபிடித்துவிட்டேன். இதோ, இளவரசன் அணிந்திருந்த நகைகள். நீங்கள் என்னுடன் வந்தால் அவனைப் பிடித்துவிடலாம்" எனக் கூறி நகைகளையும் கொடுத்தான். காவலர்கள் அந் நகைகளைஅரசனிடம் காட்டி வாணன்சொன்னவற்றைக் கூறினர். அரசன் நகைகளைப் பார்த்தான். அவை இளவரசன் அணிந்திருந்தவையே என்பதை உணர்ந்தான். அரசன் கடுஞ்சினம் கொண்டான். கள்வனைக் கொண்டு வர ஆணையிட்டான். அரசன் ஆணைப்படி தத்தனைக் கட்டி இழுத்து வந்தார்கள். தத்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. அரசன் தத்தனை நோக்கி, "இந்த நகைகளை வாணனிடம் கொடுத்தது நீதானே?" என அதட்டிக் கேட்டான். 'ஆம்' என்றான் தத்தன். மன்னன் கடுஞ்சினத்தால் நன்கு ஆராயாமல் தத்தனே குற்றவாளி என முடிவு செய்தான். மறுநாள் காலையில் அவன் தலையை வெட்டிவிடுமாறு கட்டளையிட்டான். காவலர்கள் தத்தனைச் சிறையில் தள்ளினர்.

தத்தன் சிறைச்சாலையில் புழுங்கிக்கொண்டிருந்தான். "நான் காப்பாற்றிய வாணனே இன்று எனக்குத் தண்டனை வாங்கிக்கொடுத்துவிட்டான். துன்பத்தி

லிருந்த உயிர்களை அன்று நான் காப்பாற்றினேன். என்னை இன்று யார் காப்பாற்றப்போகிறார்?'' எனத் தனக்குள் எண்ணி வருந்தினான். அப்போது கிணற்றி லிருந்து தத்தனால் காப்பாற்றப்பட்ட பாம்பு அங்கே வந்தது. ''ஐயா! நீங்கள் என்னைத் துன்பத்திலிருந்து அன்று காப்பாற்றினீர்கள். இன்று நான் உங்களைக் காப்பாற்றுகிறேன். இப்போது நான் அரசியைத் தீண்டுவேன். உம்மைத் தவிர எவராலும் அரசியைக் காப்பாற்ற முடியாது. நீங்கள் சென்று அரசியைத் தொட்டதும் நஞ்சு வெளியேறி அரசி பிழைப்பாள்'' என்று சொல்லிச் சென்றது.

தத்தனிடம் கூறியபடியே அந்தப் பாம்பு அரசியைத் தீண்டியது. மருத்துவர்கள் வந்தனர். மந்திரவாதிகளும் வரவழைக்கப்பட்டனர். ஒருவராலும் அரசியைக் காப் பாற்ற முடியவில்லை. அரசியின் உயிரைக் காப்பாற்று கின்றவர்களுக்குத் தக்க பரிசு தருவதாக அரசன் நகரெங்கும் அறிவித்தான். சிறையிலிருந்த தத்தனும் இச் செய்தியை அறிந்தான். ''நான் அரசியைக் காப் பாற்றுகிறேன்'' எனக் கூறினான்.

காவலர்கள் தத்தனை அரசனிடம் அழைத்துச் சென்றனர். அவன் அரசியைத் தொட்டதும் உறக்கத் திலிருந்து எழுவதுபோல் விழித்து எழுந்தாள்.

மன்னன் மகிழ்ச்சி அடைந்தான். தத்தனுக்கு மிகுந்த பொருள்களைப் பரிசாக அளித்தான். அரசன் தத்தனிடம், ''இவ்வளவு நல்லவராகத் தோன்றும் உங்க ளிடம் இளவரசனது நகைகள் எப்படி வந்தன? உண்மையைச் சொல்லுங்கள்'' எனக் கேட்டான். தத்தன் நடந்ததை அப்படியே எடுத்துரைத்தான். மேலும், ''அரசே! துன்பத்துக்கு ஆளான குரங்கு, புலி, பாம்பு ஆகியவற்றைக் காப்பாற்றத் தயங்கினேன். ஆனால், இந்த மனிதனை முழுமனத்தோடு அன்புடன் காப்பாற்றி னேன். துன்பம் செய்யுமோ என நான் அஞ்சிய அந்த

விலங்குகள் நன்றி மறவாமல் எனக்கு உதவி செய்தன. நான் நம்பிய இந்த மனிதன் எனக்குக் கேடு செய்து விட்டான்'' எனக் கூறினான்.

அரசன் வாணனின் வஞ்சகச் செயலை அறிந்து அவனுக்குக் கடுந் தண்டனை விதித்தான்; தத்தனைத் தன் நகரிலேயே குடியேறச் செய்து அவன் மனைவி மக்களுடன் இனிது வாழ உதவினான். தத்தன் தன் குடும்பத்தோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான்.

*''செய்த நன்றி ஒருநாளும் மறக்க வேண்டா.''*

*—உலகநீதி*

*''நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்*
*கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத*
*ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்*
*நீர்மேல் எழுத்துக்கு நேர்.''*

*—மூதுரை*

# 15. பாவலரும் காவலரும்

உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டைச் சிறப்பாக ஆண்ட மன்னன் கோப்பெருஞ்சோழன். அவன் புலவர் பலரும் பாராட்டுமாறு வாழ்ந்தான்; பாடும் திறமுடைய பாவலனாகவும் திகழ்ந்தான். அவன் பாடிய பாக்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. அம் மன்னன் பாடிய பாக்கள் நட்பின் பெருமையை விளக்குவன.

அம் மன்னனைக் குறித்துப் புலவர் பலர் பாடியுள்ளனர். பாடிய புலவர்கள் கோப்பெருஞ் சோழனின் அரசியல் பெருமை குறித்துப் பாடவில்லை. அதனினும் மேலாக அவன் கொண்ட நட்பைக் குறித்தே பாடியுள்ளனர். மன்னனாகவும் மாண்புடைப் புலவனாகவும் வாழ்ந்த கோப்பெருஞ்சோழன் நட்பிற்கு இலக்கணமாக வாழ்ந்தவன்.

பழந்தமிழகத்தில் வாழ்ந்த பல்வேறு மன்னர்களைப் புலவர் பல்ரும் பாராட்டியுள்ளனர். அப் புலவர் பெருமக்கள் மன்னரது கொடையையும் வீரத்தையுமே பாராட்டினர். கொடுத்ததைப் பற்றிப் பாடித் தம் செய்ந்நன்றியை வெளிப்படுத்தினர்.

ஆனால், கோப்பெருஞ்சோழனைப் பாராட்டியவர் அவனது கொடைப்பெருமையையோ, ஆட்சிச் சிறப்பையோ பாடவில்லை. அவனது ஒன்றுபட்ட நட்பின் பெருமையையே பாடினர். எனவே, மற்றைய மன்னர் தம் பாராட்டினைவிடக் கோபெருஞ்சோழன் பெற்ற பாராட்டு மிகச் சிறந்ததாகும்.

சோழ நாட்டில் கோபெருஞ்சோழன் வாழ்ந்த காலத்தில், பாண்டிய நாட்டில் பிசிர் என்ற ஊரில் ஆந்தையார் என்ற அறிஞர் ஒருவர் வாழ்ந்தார். அவரது அரும் புலமையையும் நல்லியல்புகளையும் சோழன் கேட்டறிந்தான். ஆனால், அவரை நேரில் பார்த்தது இல்லை.

நல்லவரோடு நட்புக் கொள்வதை இயல்பாகக் கொண்ட சோழ மன்னன், ஆந்தையாரைப் பெரு நண்பராகக் கருதினான். அவரைக் காணாமலே அவர்பால் பேரன்பும் பெருநட்பும் கொண்டான். நட்பின் பெருக்கால் ஆந்தையாரைப் பாராட்டிப் பாடினான்.

"பிசிர் ஆந்தையார் நீண்ட தொலைவில் பாண்டி நாட்டில் இருப்பினும் அவரே என் உயிர் நண்பர்; உயர்ந்த நண்பர். அவர் பிறரைப் பழிக்காத பண்புடையவர்; பொய் கூறுவதால் புகழ் வரும் என எவராவது கூறினால்கூடப் புகழுக்காகப் பொய் கூறாதவர். அவர் பெயரை எவராவது கேட்டால், 'என் பெயர் கோப்பெருஞ்சோழன்' என என் பெயரைக் கூறுவாரே யொழியத் தம் பெயரைக் கூற மாட்டார். அந்த அளவு என்மீது அன்பும், உறுதியான நட்பும் உடையவர்" எனப் பலரும் அறியப் போற்றிப் பாராட்டினான்.

சோழனைப் போலவே பிசிர் ஆந்தையாரும் சோழனைக் காணாமலே அவன்மீது அளவு கடந்த நட்புப் பூண்டிருந்தார்; அவனது புகழைப் பாடி மகிழ்ந் திருந்தார். பண்டைப் புலவர்கள் மன்னர்களைக் கண்டு பாடிப் பரிசில் பெறுவர். ஆனால் மன்னனைக் காணா மலே, எவ்விதப் பயனும் எதிர்பாராமல் சோழனைப் புகழ்ந்து போற்றிய பிசிர்ஆந்தையாரின் நட்புப்பெருமை வியக்கத்தக்கது.

வடக்கு நோக்கி ஓர் அன்னம் பறந்து சென்றது. அதனைக் கண்டு ஆந்தையார் சொன்னார்:


''அன்னமே! வடக்கு நோக்கிச் செல்லும் நீ உறையூருக்குப் போ. அங்கு ஆளும் கோப்பெருஞ்சோழனிடம் நேரே சென்று, 'நான் ஆந்தையாரிடம் அன்புடையவன்' எனக் கூறினால், உன் மனைவி அணியத்தக்க அணிகள் அத்தனையும் பரிசாகத் தருவான்.''

இவ்வாறு வாழ்ந்த பிசிர்ஆந்தையார் வயது முதிர்ந்தவர் ஆயினும் அவரது தலைமுடி நரைக்கவில்லை. இதனைப்பற்றிப் பலர் அவரிடம் கேட்டனர். அப்போது ஆந்தையார் சொன்னார்:

''என் முடி நரைக்காமைக்குக் காரணம் என்னவென்றா கேட்கிறீர்கள்? கூறுகிறேன். என் மனைவி மக்கள் அறிவுடையவராயுள்ளனர்; என் உளமறிந்து நடக்கிறார்கள். என் இளைஞர்கள் என் கருத்துக்கேற்ப ஏவல்களைப் பிறர் கூறாமலே செய்து முடிக்கும் நல்லவர்கள். நான் வாழும் நாட்டினை ஆள்கின்ற மன்னனும் நீதி தவறாதவன். என்னைச் சூழ்ந்து சான்றோர்கள் பலர் வாழ்கிறார்கள். ஆகவே என் குடும்பத்தாராலும், ஏவலராலும், அரசனாலும், ஊரிலுள்ள சான்றோர்களாலும் எனக்கு நன்மையே ஏற்படுகிறது; துன்பம் ஏதும் இல்லை. எனவே, என் மனத்தில் கவலை என்பதே தோன்றவில்லை. அதனால்தான் என்முடி நரைக்கவில்லை.''

ஒருவரை ஒருவர் காணாமலே சோழனும் பிசிர் ஆந்தையாரும் நண்பர்களாய் விளங்கினர். பலருக்கும் அவர்கள் கொண்ட நட்பு பெருவியப்புக்குரியதாக இருந்தது.

பிள்ளைகள் தன்னை எதிர்த்தமையால் உயிர்வாழ விரும்பாமல் வடக்குத் திசைநோக்கி உண்ணா நோன்பும் பேசா நோன்பும் மேற்கொண்டு உயிர்விடத் துணிந்தான் சோழன்; இந்த நோன்பை மேற்கொள்ளும் இடமாகக் காவிரிக்கரையைத் தெரிந்தெடுத்தான். அப்போது கோப்



பெருஞ்சோழன், "எனக்குப் பக்கத்தில் என் ஆருயிர் நண்பர் பிசிர் ஆந்தையாருக்கு ஓர் இடம் ஒதுக்குங்கள்" எனக் கூறினான்.

அருகிருந்த புலவர்கள், "அரசே! ஆந்தையார் உன் புகழையும் பெயரையும் கேட்டவரேயன்றி உன்னைக் கண்டு பழகியவர் அல்லர். இத்தனை ஆண்டுகள் ஆகியும் ஒருமுறைகூட உன்னைக் காண அவர் வந்தவர் அல்லர். அவர் உள்ள இடமோ நீண்ட தொலைவில் உள்ளது. நீ உயிர்விடத் துணிந்த இந்தச் செய்தியினை அவர் அறிய வாய்ப்பில்லை. ஆகவே, அவர் இப்போது இங்கு வருவது இயலாது. அவருக்கு இடம் ஒதுக்குவது வீண்அன்றோ?"எனக் கேட்டனர்.

அவர் கூறியதைக் கேட்ட சோழன், "புலவர்களே! அவர் வருவாரா? அவருக்கு எப்படி என் நிலை தெரியும்? என்னும் ஐயம் உங்களுக்கு வேண்டா. நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை என்றாலும் உணர்ச்சி யால் நெடுநாளாக ஒன்றுபட்டவர்கள். நல்ல நண்பர்கள். வளமாக வாழுங்காலத்தில் ஒருவரை ஒருவர் சந்திக்க வாராதிருந்தாலும் நண்பனுக்கு இன்னல் வரும்போது தவறாது வருவார். ஆகவே, பிசிராந்தையார் நான் அரசனாகப் புகழோடு வாழ்ந்த காலத்தில் வாராதிருப்பினும், நான் அரசிழந்து உயிர் விடப் போகும் இவ் வேளையில் உறுதியாக வருவார். அவருக்கும் இடம் ஒதுக்குங்கள்" என்றான்.

அரசன் ஆணைப்படி பிசிராந்தையாருக்கும் ஓர் இடம் ஒதுக்கினர். சில நாள்கள் சென்றபின் சோழன் சொல்லியவாறே ஆந்தையார் அக் காவிரிக் கரைக்கு வந்து சேர்ந்தார். தம் இனிய நண்பனின் நிலை கண்டு வருந்தினார். தம் நண்பர் உயிர் வேறு, தம்முயிர் வேறு என அவர் கருதாதவர். ஆதலின், தாமும் அவனோடு உயிர்விடத் துணிந்தார்.

'பிசிராந்தையார் கண்டிப்பாய் வருவார்' எனக் கூறிய சோழனின் நம்பிக்கையின்படி வந்து சேர்ந்த பிசிராந்தையார் பெருமையை எண்ணி அனைவரும் வியந்தனர். அவர் இருவர்தம் நட்பினை வியந்து பாராட்டினர். கோப்பெருஞ்சோழனும் பிசிர் ஆந்தையாரும் அருகருகே இருந்து உயிர் துறந்தனர். அழியும் உடல்களை அவர்கள் இழந்தாலும் அழியாப் புகழையன்றோ பெற்றனர்!

"புணர்ச்சி பழகுதல் வேண்டா: உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்."

—திருக்குறள்

Wrapper Printed at
S. S. V. Press, Madras-600 023